# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

## மானியக் கோரிக்கை எண். 21


# எ.வ. வேலு

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும்
சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | கொள்கை வரையறை | 9 |
| 3 | திட்டங்கள் | 19 |
| 4 | துறையின் நிர்வாக அமைப்பு | 25 |
| 5 | சிறப்பு சாலை உள்கட்டமைப்பு வசதிகள் | 27 |
| 6 | சாலை பாதுகாப்பு | 47 |
| 7 | முதன்மை இயக்குநர் அலுவலகம் | 57 |
| 8 | கட்டுமானம் மற்றும் பராமரிப்பு | 63 |
| 9 | தேசிய நெடுஞ்சாலை | 87 |
| 10 | நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் | 107 |
| 11 | திட்டங்கள் | 115 |
| 12 | பெருநகரம் | 125 |
| 13 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II | 135 |
| 14 | சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் | 145 |
| 15 | சென்னை எல்லைச் சாலை திட்டம் | 155 |
| 16 | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் | 163 |
| 17 | திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு | 179 |
| 18 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் | 182 |
| 19 | தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | 188 |
| 20 | தமிழ்நாடு கடல்சார் வாரியம் | 192 |
| 21 | பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் | 209 |

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கொள்கை விளக்கக் குறிப்பு 2022-23

## 1. முகவுரை

நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு இன்றியமையாதது ஆகும். விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா மற்றும் மருத்துவத் துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உள்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே அனைத்து பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை பெருக்கிட, திறனான சாலை கட்டமைப்பை அமைப்பது அவசியமாகிறது. இது, தொலைதூர பகுதிகள், சந்தை மற்றும் வணிக மையங்களை எல்லை வரை அணுகுவதற்கு வகைசெய்கிறது.

சிறு துறைமுகங்கள் கடல் சார்ந்த தொழில்களை மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் கடலோர பகுதிகளில் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

## 1.1 நெடுஞ்சாலைகள்

மாநிலத்தின் சாலை உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள, 1946 ஆம் ஆண்டிலேயே தனித்துவமிக்க நெடுஞ்சாலைத்துறையினை உருவாக்கிய பெருமை தமிழக அரசுக்கே உரித்தானதாகும். இத்துறையானது கடந்த 75 ஆண்டுகளாக தரமான, பாதுகாப்பான மற்றும் நம்பகமான சாலை கட்டமைப்பினை உருவாக்கி பராமரித்து சிறப்பாக பணியாற்றி வருகிறது.

## சாலைகளின் வகைபாடுகள்

அமைவிடம், முக்கியத்துவம் மற்றும் செயல்பாட்டினைப் பொறுத்து சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

### தேசிய நெடுஞ்சாலைகள் (NH)

தேசிய நெடுஞ்சாலைகள், மாநிலங்களின் தலைநகரங்கள், பெரிய நகரங்கள், தொழில் மையங்கள் மற்றும் துறைமுகங்களை இணைக்கும் முக்கிய சாலைகளாக விளங்குகிறது. **இச்சாலைகள் ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.**

### மாநில நெடுஞ்சாலைகள் (SH)

மாநில நெடுஞ்சாலைகள், மாநிலத்திலுள்ள மாவட்ட தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள்,

தொழில் பகுதிகள் மற்றும் சுற்றுலா/வழிபாட்டுத் தலங்களை இணைக்கின்றன.

**மாவட்ட முக்கிய சாலைகள் (MDR)**

ஒரு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள உற்பத்தி மற்றும் வணிக மையங்களை இணைப்பதுடன், மாவட்ட மற்றும் வட்டத் தலைமையிடங்களை, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கின்றன.

**மாவட்ட இதர சாலைகள் (ODR)**

கிராமப்புறங்களிலுள்ள உற்பத்தி மையங்கள் சந்தைகள், வட்ட தலைமையிடங்கள், வட்டார வளர்ச்சி தலைமையிடங்கள் மற்றும் இதர முக்கியச் சாலைகளை இணைக்கின்றன.

**மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன.**

**<u>சாலைகளின் நீளம் (கி.மீ.-ல்)</u>**

| **சாலைகளின் வகைபாடு** | | **நீளம்** |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் | மாநில தேசிய நெடுஞ்சாலைகள் | 1511 |
| | இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் | 5095 |
| | **மொத்தம்** | **6606** |
| மாநில நெடுஞ்சாலைகள் | | 11279 |
| மாவட்ட முக்கிய சாலைகள் | | 11625 |
| மாவட்ட இதர சாலைகள் | | 41052 |
| **சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ தவிர)** | | **63956** |
| **ஆக மொத்தம்** | | **70562** |

சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாகவும் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளாகவும் மேம்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை 03.11.2021 அன்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**சாலைகளின் வழித்தட விவரங்கள் (நீளம் கி.மீ.-ல்)**

| வகைபாடு | ஒரு வழித்தடம் | இடை வழித்தடம் | இரு வழித்தடம் | கடின புருவங்களுடன் கூடிய இரு வழித்தடம் | நான்கு வழித்தடம் | ஆறு வழித்தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| தேசிய நெடுஞ் சாலைகள் | - | - | 1892 | 2127 | 2263 | 324 | 6606 |
| மாநில நெடுஞ் சாலைகள் | 33 | 207 | 7961 | 1830 | 1017 | 231 | 11279 |
| மாவட்ட முக்கிய சாலைகள் | 315 | 6243 | 4669 | 294 | 101 | 3 | 11625 |
| மாவட்ட இதர சாலைகள் | 33066 | 6567 | 1331 | 76 | 12 | - | 41052 |
| **மொத்தம்** | **33414** | **13017** | **15853** | **4327** | **3393** | **558** | **70562** |

## 1.2 தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு 3 பெரிய துறைமுகங்கள் (சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி) மற்றும் 17 சிறு துறைமுகங்களையும் உள்ளடக்கிய இரண்டாவது பெரிய கடற்கரையைக் (1076 கி.மீ.) கொண்டது. பெரிய துறைமுகங்களை ஒன்றிய அரசு நிர்வகித்து வருகிறது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் கட்டுப்பாட்டில் சிறுதுறைமுகங்களை நிர்வகித்து, மேலாண்மை செய்து வருகிறது.

## 1.3 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் இயக்கப்படும் அனல்மின் நிலையங்களில் மின் உற்பத்திக்குத் தேவைப்படும் நிலக்கரியை எடுத்து வருவதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11.04.1974 அன்று நிறுவனங்கள் சட்டம் 1956 இன் படி நிறுவப்பட்டது.

இக்கழகம், சுற்றுலா தலமான கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குச் சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்காகப் படகுப் போக்குவரத்து மேற்கொண்டு வருகிறது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோயம்பேடு மேம்பாலம் 01.11.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது

1A

## 2. கொள்கை வரையறை

பயணிகள் மற்றும் பொருள்களின் பாதுகாப்பான மற்றும் விரைவான போக்குவரத்தில் சாலை கட்டமைப்பு அத்தியாவசியமாகும். இரயில், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்திற்கு சாலைப் போக்குவரத்து இணைப்பு சேவையாக செயல்படுகிறது. எனவே முக்கியமான இடங்களுக்கு இணைப்பை வழங்குவதற்கும், தொடர்ந்து அதிகரித்து வரும் போக்குவரத்தைப் பூர்த்தி செய்வதற்கும், சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவது அவசியமாகிறது. எனவே, தமிழ்நாடு அரசு அடுத்த பத்தாண்டுகளுக்கு கீழ்க்கண்ட தொலைநோக்குத் திட்டங்களை வகுத்துள்ளது.

- **முதலமைச்சர் அவர்களின் சாலை மேம்பாட்டுத் திட்டம் (CMRDP)**

  - **2200 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை நான்கு வழித்தடச் சாலைகளாக, அடுத்த 10 ஆண்டுகளில் அகலப்படுத்துதல்.**

    - 2021-22 ஆம் ஆண்டில் 255.02 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

  - **வட்ட / வட்டார தலைமையிடங்களை இணைக்கும் 6700 கி.மீ. நீளமுள்ள ஒருவழி மற்றும் இடைவழித்தடச் சாலைகளை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் / மாவட்ட இதர சாலைகளை இரு வழித்தடச் சாலைகளாக, அடுத்த 10 ஆண்டுகளில் அகலப்படுத்துதல்**

- 2021-22 ஆம் ஆண்டில் 639.10 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- **தற்போதுள்ள அனைத்து 1281 பழைய தரைப்பாலங்களுக்குப் பதிலாக உயர்மட்ட பாலங்கள் பல்வேறு கட்டங்களாக கட்டுதல்.**

  - 2021-22 ஆம் ஆண்டில் 648 தரைப்பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- **போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 59 நகராட்சிப் பகுதிகளில் புறவழிச்சாலைகள் அமைத்தல்.**

  - 4 புறவழிச்சாலைகள் கட்டுமான நிலையிலும், 27 பணிகள் நில எடுப்பு நிலையிலும், 22 பணிகள் விரிவான திட்ட அறிக்கை நிலையிலும், 6 பணிகள்

சாத்தியக்கூறு அறிக்கை நிலையிலும் உள்ளன.

- **மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் அமைந்துள்ள இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலங்கள் அமைத்தல்.**

  ❖ இரயில்வே மேம்பாலங்கள் அமைக்க கண்டறியப்பட்ட 100 இரயில்வே கடவுகளில், 20 பணிகள் விரிவான திட்ட அறிக்கை நிலையிலும் மற்றும் 29 பணிகள் நில எடுப்பு நிலையிலும் உள்ளன. மீதமுள்ளவை அடுத்தடுத்த கட்டங்களில் எடுத்துக் கொள்ளப்படும்.

- **10,000 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி சாலைகள் / ஊராட்சி ஒன்றிய சாலைகளை ஐந்து**

**ஆண்டுகளில் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துதல்**

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 3,435 கி.மீ. நீளமுள்ள சாலைகளை தரம் உயர்த்துவதற்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.
  - முதற்கட்டமாக, 2,000 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தப்படவுள்ளது.

- நகரங்களில் அதிக போக்குவரத்துச் செறிவுடைய பகுதிகளில் உயர்மட்ட சாலைகள் கட்டுதல்
  - மூன்று பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

- <u>திருச்சி</u>

  - தலைமை தபால் அலுவலகம் முதல் காந்தி சிலை, முத்தரையர் சிலை வழியாக நீதிமன்ற ரவுண்டானா வரை
  - ஓடத்துறை காவேரி பாலம் முதல் அண்ணா சிலை, கலைஞர் அறிவாலயம் வழியாக மல்லாட்சிபுரம் வரை

- <u>மதுரை</u>

  - நெல்பேட்டை முதல் அவனியாபுரம் புறவழிச்சாலை சந்திப்பு வரை.

❖ சென்னை மற்றும் திருச்சியில் உயர்மட்ட சாலை அமைக்குமாறு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- **தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சரக்கு கையாளும் திறனை 1.5 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 10 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்த்துதல்.**

  ❖ கடலூர் துறைமுகத்தில் பொது தனியார் பங்களிப்பு முறையில் (பிபிபி) துறைமுக இயக்குபவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**இந்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்குத் தமிழக அரசால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

○ **இந்திய அரசால் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்.**

  ✓ சென்னை துறைமுகத்தில் இருந்து மதுரவாயல் வரை உயர்மட்டச் சாலை

- ❖ இரண்டடுக்கு மேம்பாலத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

✓ விக்கிரவாண்டி – கும்பகோணம் – தஞ்சாவூர் சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல்

- ❖ தமிழக அரசின் தொடர் நடவடிக்கையால் இடர்ப்பாடுகள் களையப்பட்டு பணிகள் வெவ்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

- **சென்னை முதல் கன்னியாகுமரி வரை கிழக்குக் கடற்கரைச் சாலையினை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்துதல்.**

- ❖ சென்னை முதல் நாகப்பட்டினம் வரை பணிகள் பல்வேறு நிலைகளில்

முன்னேற்றத்தில் உள்ளன. நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரை விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- **சென்னை முதல் திருச்சி, மதுரை வழியாக கன்னியாகுமரி வரையிலான சாலையை, நான்கு வழித்தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக மேம்படுத்துதல்.**

  - ❖ தாம்பரம் முதல் செங்கல்பட்டு வரை உயர்மட்ட சாலை மற்றும் செங்கல்பட்டு முதல் திண்டிவனம் வரை உள்ள சாலையினை எட்டு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகளுக்கான நேர்பாட்டிற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. திண்டிவனம் முதல் கன்னியாகுமரி வரை பணிகள் தொடங்க வலியுறுத்தப் பட்டுள்ளது.

- **சென்னை துறைமுகம் முதல் மணலி – திருவொற்றியூர் சந்திப்பு வரை போக்குவரத்து நெரிசலைக் குறைக்க கடல் பாலம் அமைத்தல்.**

  ❖ விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

# 3. திட்டங்கள்

## 3.1 மாநில நிதித் திட்டங்கள்

- ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)
- சாலை பாதுகாப்புத் திட்டம்
- சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்
- புறவழிச்சாலைகள் அமைத்தல்
- உயர்மட்ட பாலங்கள் அமைத்தல்
- சாலை மேம்பாலங்கள் / உயர்மட்ட சாலைகள் அமைத்தல்
- கிராமப்புற சாலை மேம்பாடு
- பராமரிப்பு பணிகள்

## 3.2 ஒன்றிய அரசு நிதித் திட்டங்கள்

- ஆண்டுத் திட்டம்
- மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி (CRIF)

## 3.3 இதர திட்டங்கள்

- நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்
- இரயில்வே திட்டப்பணிகள் (RWP)

## 3.4 பன்னாட்டு நிதியுதவித் திட்டங்கள்

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II (TNRSP-II)
- சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் (CKICP)
- சென்னை எல்லைச் சாலை திட்டம் (CPRR)

## 3.5 நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG)

ஐக்கிய நாடுகள் சபை 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் கொண்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிர்ணயித்துள்ளது. இதன் அடிப்படையில் இந்திய நாட்டிற்கான இலக்குகள்

மற்றும் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டு அதன் வளர்ச்சி அளவிடப்படுகிறது.

நெடுஞ்சாலைத்துறைக்கான இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் பின்வருமாறு:

**<u>இலக்கு 3 - அனைவருக்கும் அனைத்து வயதிலும் ஆரோக்கியமான வாழ்வு மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்தல்.</u>**

**<u>குறிக்கோள் 3.6</u>**: உலக அளவில் 2020 ஆம் ஆண்டிற்குள் சாலை போக்குவரத்தால் நிகழும் சாலை விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளை பாதியாகக் குறைத்தல்.

இந்த இலக்குடன் தொடர்புடைய குறிகாட்டியானது, சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் இதர இழப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதாகும்.

சாலை பொறியியல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் விபத்து கரும்புள்ளிகளைச் சரிசெய்வது இத்துறையின் சாலை பாதுகாப்பு திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் போக்குவரத்து, சுகாதாரம், காவல் மற்றும் கல்வி ஆகிய பங்களிப்புத் துறைகளுடன் ஒருங்கிணைந்து விபத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**இலக்கு 9 - தொழில்மயமாக்கல், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பை உருவாக்குதல்**

**நெகிழ்திறன்மிக்க உட்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய நிலையான தொழில்மயமாதலை மேம்படுத்தும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.**

**<u>குறிக்கோள் 9.1:</u>** அனைவரும் பெறத்தக்க வகையிலான தகுந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்வாழ்வினை மக்களுக்கு அளிப்பதற்கான மண்டலம் மற்றும் எல்லை மண்டலங்களுக்கிடையேயான தரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்திறன்மிக்க உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

இந்த இலக்குடன் தொடர்புடைய குறிகாட்டியானது, நாட்டின் சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக சிறந்த உள்கட்டமைப்பை உருவாக்குவதாகும். சாலை உள்கட்டமைப்பு மக்கள் மற்றும் வணிகப் பொருள்களின் போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த இலக்கை அடைய இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட ஏழு குறிகாட்டிகள், வழித்தட மேம்பாட்டுடன் கூடிய **மாநில நெடுஞ்சாலைகள்,**

**மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின்** நீளம் ஆகும். சாலைகளின் திறனை அதிகரிக்க சாலைகளின் வழித்தடங்களை தரம் உயர்த்துவதற்கு பல்வேறு திட்டங்களின் மூலம் தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 3.6 2021-22 ஆம் ஆண்டின் மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2021-22-ல் ரூ.15,809.03 கோடி நிதி திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. இதில் ரூ.13,110.88 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2022-23 ஆம் நிதி ஆண்டில் வரவு செலவு திட்டத்தில் ரூ.15,960.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. துறையின் நிர்வாக அமைப்பு

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கீழ்க்கண்ட அமைப்புகளின் மூலம் செயல்பட்டு வருகிறது:

**நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை**

**நெடுஞ்சாலைத்துறை அலகுகள்**

- முதன்மை இயக்குநர் அலுவலகம்
- கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
- தேசிய நெடுஞ்சாலை
- நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்
- திட்டங்கள்
- பெருநகரம்
- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்
- திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II
- சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்

**நிறுவனங்கள்/ கழகங்கள்/ வாரியம்**

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்
- தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்
- தமிழ்நாடு கடல்சார் வாரியம்
- பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

### 4.1 சிறப்பு நில எடுப்பு அலகு

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகள் தொடர்பான நில எடுப்பினை துரிதப்படுத்துவதற்காக 5 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் 18 வட்டாட்சியர் பிரிவுகளுடன் சிறப்பு நில எடுப்பு அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

# 5. சிறப்பு சாலை உள்கட்டமைப்பு வசதிகள்

சிறப்பு சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பின்வரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## 5.1 புறவழிச்சாலைகள் அமைத்தல்

சாலைப் போக்குவரத்தானது, தங்கு தடையில்லாமல் செல்வதற்கும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், வாகன இயக்க செலவைக் குறைக்கவும் பயண நேரத்தை குறைக்கவும் புறவழிச்சாலைகள் பயன்படுகின்றன.

| 112 புறவழிச்சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது | |
|---|---|
| கட்டுமானம் | 27 |
| நில எடுப்பு | 34 |
| விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு | 41 |
| கட்டுமானத்திற்கு முந்தைய நிலை | 10 |

கட்டுமான நிலையிலுள்ள புறவழிச்சாலைப் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- திருத்தணி
- இலுப்பூர்
- இராசிபுரம்
- தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை
- பொள்ளாச்சி மேற்கு புறவழிச்சாலை
- வாலாஜாபாத்
- அரக்கோணம்
- நக்கசேலம்
- குரும்பலூர்
- மங்கலம்பேட்டை
- பண்ருட்டி
- முத்துக்காப்பட்டி
- சேந்தமங்கலம்
- காளப்பநாயக்கன்பட்டி
- பேளூக்குறிச்சி
- சிங்களாந்தபுரம்
- கொங்கனாபுரம்

- திருவைகுண்டம்
- வந்தவாசி
- சேத்துப்பட்டு
- மருதாடு
- திருப்பத்தூர்
- வைத்தீஸ்வரன் கோவில்
- சங்ககிரி
- திருச்செங்கோடு
- கேளம்பாக்கம்
- திருப்போரூர்

கட்டுமானத்திற்கு முந்தைய நிலை, நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் நிலையிலுள்ள புறவழிச்சாலைப் பணிகள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது.

## 5.2 உயர்மட்ட பாலங்கள் அமைத்தல்

ஆறுகள் மற்றும் கால்வாய்களை கடந்து செல்லும் வகையில் சீரான போக்குவரத்தினை உறுதி செய்ய ஆற்றுப் பாலங்கள் கட்டப்படுகின்றன. இவை பருவ காலங்களில் தடையற்ற போக்குவரத்தினை வழங்க உதவிபுரிகின்றன.

| | |
|---|---|
| 324 உயர்மட்ட பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன | |
| கட்டுமானம் | 129 |
| நில எடுப்பு | 9 |
| விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு | 56 |
| கட்டுமானத்திற்கு முந்தைய நிலை | 130 |

சில முக்கிய உயர்மட்ட பாலப் பணிகள் பின்வருமாறு:

**முடிக்கப்பட்ட பணிகள்**

- தண்டரை – எரையூர் சாலையில் கி.மீ.0/8ல் செய்யாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி
- தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவானைக் கோவில் சாலை மற்றும் கல்லணை சாலையை இணைக்கும் கல்லணையில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே

உயர்மட்ட பாலம் கட்டும் பணி

**<u>நடைபெறும் பணிகள்</u>**

- மேலக்கல் – பேரணை சாலையில் கி.மீ.27/10ல் உள்ள மண்ணடிமங்கலம் மற்றும் சோழவந்தான் – கருப்பட்டி சாலையில் கி.மீ.2/2ல் உள்ள இரும்பாடி இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி.
- புளியம்பட்டி – பவானிசாகர் – பண்ணாரி சாலையில் (மா.மு.சா. 889) பவானி ஆற்றின் குறுக்கே பாலம் மீளக் கட்டும் பணி.
- திருத்தணி – நாகலாபுரம் சாலையில் (மா.மு.சா. 719) கி.மீ.11/7ல் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தற்போதுள்ள பழைய தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்ட

பாலம் கட்டும் பணி.

## 5.3 தரைப்பாலங்களுக்கு மாற்றாக உயர்மட்ட பாலங்கள் அமைக்கும் பணிகள்

648 தரைப்பாலங்களுக்கு மாற்றாக உயர்மட்ட பாலங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளன.

## 5.4 சாலை மேம்பாலங்கள் அமைத்தல்

போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில் உள்ள சந்திப்புகளில் தங்குதடையற்ற போக்குவரத்துக்கும், வாகன விபத்துகளைக் குறைக்கவும் மற்றும் சாலைப் பயனாளர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும் சாலை மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 22 சாலை மேம்பாலப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன | |
| கட்டுமானம் | 5 |

| | |
|---|---|
| நில எடுப்பு | 2 |
| விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு | 14 |
| கட்டுமானத்திற்கு முந்தைய நிலை | 1 |

சாலை மேம்பாலப் பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**முடிக்கப்பட்ட பணிகள்**

- கோயம்பேடு சந்திப்பில் சாலை மேம்பாலப் பணி
- தரமணி முதல் வேளச்சேரி புறவழிச்சாலை கரம் (Arm) வரையிலான பகுதியில் சாலை மேம்பாலம்
- மதுரை – தொண்டி சாலை கி.மீ.3/2 மற்றும் மதுரை சுற்றுச் சாலை கி.மீ.2/4 சந்திப்பில் சாலை மேம்பாலம்

**நடைபெறும் பணிகள்**

- வேளச்சேரி சந்திப்பில் வேளச்சேரி

புறவழிச்சாலை முதல் தரமணி வரையிலான பகுதியில் சாலை மேம்பாலம் கட்டும் பணி.

- மேடவாக்கம் சந்திப்பில் தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான பகுதியில் சாலை மேம்பாலப் பணி.
- மவுண்ட்-பூந்தமல்லி -ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை சாலை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணி ஆகியவை மெட்ரோ இரயில் பணியுடன் ஒருங்கிணைந்த பணியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.
- கோயம்புத்தூரில் உள்ள ஆத்துப்பாலம் –

உக்கடத்தில் சாலை மேம்பாலம் கட்டும் பணி.

- மத்திய கைலாஷ் சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டும் பணி (கட்டுமானத்திற்கு முந்தைய நிலை).

**<u>விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு நிலை</u>**

- மதுரை – தனுஷ்கோடி சாலை கி.மீ.5/0 (தே.நெ. 49) மற்றும் மதுரை சுற்றுச் சாலை கி.மீ.5/6 சந்திப்பில் (விரகனூர் சந்திப்பு) சாலை மேம்பாலம் கட்டுதல்
- திருநெல்வேலி புறவழிச்சாலை (மா.நெ. 75ஆ) வீரமாணிக்கபுரம் அருகில் கி.மீ.6/6-ல் சாலை மேம்பாலம் கட்டுதல்.
- மதுரை – பாண்டிகோவில் - கப்பலூர் சாலை (திருச்சி – அருப்புக்கோட்டை – தூத்துக்குடி சாலை தே.நெ. 45ஆ) சந்திப்பில் சாலை மேம்பாலம் கட்டுதல்.

## 5.5 உயர்மட்ட சாலைகள் அமைத்தல்

பெருநகரங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசல் மற்றும் வணிகம் மற்றும் கட்டுமானங்கள் உள்ள பகுதிகளில் சாலைகளை அகலப்படுத்துவதற்குப் போதிய இடம் கிடைக்காததால் உயர்மட்ட சாலைகள் அமைக்கப்படுகின்றன.

| 11 உயர்மட்ட சாலை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன | |
|---|---|
| கட்டுமானம் | 2 |
| விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு | 9 |

உயர்மட்ட சாலைப் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**<u>நடைபெறும் பணிகள்</u>**

- கோயம்புத்தூர் நகரத்தில் அவினாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல்

உப்பிலிப்பாளையம் வரை 10.10 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.

- ஈரோடு – திருச்செங்கோடு சாலையில் பள்ளிபாளையம் சந்திப்பில் 3.40 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.

<u>விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு நிலை</u>

- திருச்சிராப்பள்ளி – புதுக்கோட்டை – அறந்தாங்கி – மீமிசல் புறவழிச்சாலையில், காந்தி சிலை முதல் திருச்சி நீதிமன்ற ரவுண்டானா வரை 1.60 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.
- நெல்பேட்டை முதல் அவனியாபுரம் சந்திப்பு வரை 4.80 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.
- மதுரை – தொண்டி சாலையில் (அப்பலோ

மருத்துவமனை சந்திப்பு) 1.80 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.

- மதுரை – நத்தம் சாலையில் 1.80 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.
- ஈரோடு - பெருந்துறை - காங்கேயம் சாலையில் காளிங்கராயன் இல்லத்திலிருந்து திண்டல் மேடு வரை 5.40 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைத்தல்
- திருப்பூர் - பெருமாநல்லூர் -குன்னத்தூர் - பெருந்துறை சாலையில் (திருப்பூர் புதிய பேருந்து நிலையம் முதல் பூலுவபட்டி நான்கு முனைச்சாலை சந்திப்பு வரை, புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை) 6.20 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட

சாலை அமைக்கும் பணி

- திருச்சி மாநகரில் ஓடத்துறை காவிரி பாலம் முதல் அண்ணா சிலை மற்றும் கலைஞர் அறிவாலயம் வழியாக மல்லாட்சிபுரம் வரை 4.00 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி
- மதுரையில் பெரியார் பேருந்து நிலையம் முதல் மீனாட்சி பஜார் வழியாக யானைக்கல் வரை 2.40 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.
- திருச்சியில் அண்ணா சிலை முதல் திருச்சி இரயில் நிலையம் வரை 5.40 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி.

### 5.6 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் அமைத்தல்

இரயில்வே கடவுகளில் காத்திருக்கும் நேரத்தை குறைப்பதற்கும், போக்குவரத்து தடைபடுவதை தவிர்ப்பதற்கும் மற்றும் விபத்துக்களைத் தடுப்பதற்கும் இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| 138 இரயில்வே மேம்பாலம்/ கீழ்ப்பாலம் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன | |
|---|---|
| கட்டுமானம் | 39 |
| நில எடுப்பு | 58 |
| விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு | 37 |
| கட்டுமானத்திற்கு முந்தைய நிலை | 4 |

இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலப் பணிகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**<u>முடிக்கப்பட்ட பணிகள்</u>**

- காஞ்சிபுரம் இரயில் நிலையம் அருகே கடவு எண் 29 க்குப் பதிலாக கி.மீ. 72/10ல் சென்னை - பொன்னேரிக்கரை - காஞ்சிபுரம் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி.
- கடலூர்-சித்தூர் சாலையில் கி.மீ.44/6-ல் இரயில்வே கி.மீ.182/4-5-ல் உள்ள கடவு எண்.144 க்கு பதிலாக பரிக்கல்-திருவெண்ணெய்நல்லூர் இரயில் நிலையங்களுக்கு இடையே சென்னை-திருச்சி கார்டு லைனில் (Chord Line) இரயில்வே மேம்பாலம் அமைத்தல்.
- டி.கே.வி கோட்டா சாலையிலிருந்து விரிஞ்சிபுரம் செல்லும் சாலை கி.மீ 0/4-ல்,

இரயில்வே கி.மீ 142/14-16ல் லத்தேரி மற்றும் விரிஞ்சிபுரம் இரயில் நிலையங்களுக்கிடையே உள்ள கடவு எண் 59-க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் அமைத்தல்.

- பாண்டி - கிருஷ்ணகிரி சாலையில் கி.மீ 103/8-ல் இரயில்வே கி.மீ. 67/100-200ல் உள்ள கடவு எண்.55-க்குப் பதிலாக தண்டரை திருவண்ணாமலை இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.
- பொள்ளாச்சி பாலக்காடு சாலையில் கி.மீ. 1/8 ல் இரயில்வே கி.மீ. 123/1-2ல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 122க்குப் பதிலாக பொள்ளாச்சி, கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

- அண்ணனூர் கடவு எண்.7 கி.மீ.17/28 – 17/30 அம்பத்தூர் மற்றும் ஆவடி இரயில்வே நிலையங்களுக்கிடையே (அண்ணனூர் இரயில் நிலையம் அருகில்) இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

<u>**நடைபெறும் பணிகள்**</u>

- கடலூர் சித்தூர் சாலையில் கி.மீ 141/4-ல் இரயில்வே கி.மீ. 99/100-200ல் உள்ள கடவு எண்.80-க்குப் பதிலாக போளூர் ஆரணி இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.
- அஸ்தம்பட்டி செரி சாலையில் கி.மீ.1/8-ல் உள்ள கடவு எண்.184க்கு மாற்றாக இரயில்வே கி.மீ.190/300-400ல் உள்ள சேலம் சந்தை மற்றும் சேலம் நகரம் இரயில் நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டுதல் மற்றும் அஸ்தம்பட்டி

பிரட்ஸ் சாலை கி.மீ.0/6-ல் உள்ள கடவு எண்.185-க்கு மாற்றாக இரயில்வே கி.மீ.190/400-500-ல் சேலம் சந்தை மற்றும் சேலம் நகரம் இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

- திண்டுக்கல் மணக்காட்டூர் சாலையில் கி.மீ. 1/500-2/700 – உள்ள இரயில்வே கடவு எண்.2க்கு பதிலாக (திண்டுக்கல் - அக்கரைப்பட்டி இரயில் நிலையங்களுக்கு இடையே, இரயில்வே கி.மீ. 1/10-11), இரயில்வே கடவு எண்.27 (எரியோடு – திண்டுக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையே – இரயில்வே கி.மீ. 72/200-300), மற்றும் இரயில்வே கடவு எண்.308 (தாமரைப்பாடி – திண்டுக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையே, இரயில்வே கி.மீ. 431/100 - 200),

ஆகியவற்றின் குறுக்கே இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி.

- இராமநாதபுரம் - கீழக்கரை சாலை கி.மீ.0/2ல் கடவு எண்.501-க்குப் பதிலாக இரயில்வே கி.மீ.615/200-300-ல் இராமநாதபுரம் - உச்சிபுளி இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் அமைத்தல் பணி.
- இராஜபாளையம் - வெம்பகோட்டை சாலை கி.மீ. 0/8ல் (மாநில சாலை 186) பழைய கடவு எண் 449ல் இரயில்வே கி.மீ. 591/ 900 - 592/0ல் இராஜபாளையம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்
- ஆவடி – பட்டாபிராம் இரயில்வே நிலையங்களுக்கிடையே (இந்து கல்லூரி இரயில் நிலையம் அருகில்) கி.மீ.23/12-14 ல்

இரயில்வே கடவு எண்.9க்குப் பதிலாக இரயில்வே கீழ்ப்பாலம் அமைத்தல்.

# 6. சாலை பாதுகாப்பு

நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் சாலைகள் பெரும் பங்காற்றுகின்றன. தரமான, சீரான சாலைகள் பயண நேரத்தைக் குறைப்பதுடன் பாதுகாப்பான பயணத்தையும் உறுதிசெய்கின்றன. அதிவேகம், வாகனங்களின் பெருக்கம், ஓட்டுநர்களின் கவனக்குறைவு மற்றும் சாலை பொறியியல் கூறுகள் ஆகியன தமிழகத்தின் அதிக சாலை விபத்துகளுக்கு முக்கியக் காரணிகளாய் அமைந்துள்ளன.

தமிழ்நாடு அரசு சாலை விபத்துகளை குறைக்க பங்களிப்புத்துறைகளுடன் இணைந்து நீண்ட கால முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சாலை பாதுகாப்பு தொடர்பாக 18.11.2021 அன்று நடந்த கூட்டத்தில் விபத்தில்லா தமிழகத்தை

உருவாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "**இன்னுயிர் காப்போம்**" என்ற திட்டத்தின் கீழ், **சாலை பாதுகாப்பு ஆணையம், நம்மைக் காக்கும்-48, அவசரகால மருத்துவ சேவைகளுக்கான சட்டம், உதவிசெய் திட்டம், சீரான சாலைகள் மற்றும் விரிவான தகவல், கல்வி, தகவல் தொடர்பு (IEC) விழிப்புணர்வு நடவடிக்கைகள்** ஆகியவற்றை அறிவித்தார்.

மேற்கண்ட அறிவிப்புகளை செயல்படுத்துவதற்கு சாலை பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக்குழு (STF-RS) அமைக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறையானது பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளான வளைவுகளில் நேர்ப்பாட்டை மாற்றியமைத்தல், சாலைகளை அகலப்படுத்துதல், குறுகிய சிறுபாலங்கள் / பாலங்கள் திரும்பக் கட்டுதல்,

சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல், பாதுகாப்பு தடுப்புசுவர் அமைத்தல் மற்றும் விபத்து தடுப்பு அரண்கள், சாலைத் தளவாடங்கள் (Road furniture) சாலை மையத்தடுப்பு, தகவல் பலகைகள், ஒளிமிகள் (Studs) அமைத்தல் ஆகிய பணிகளை விபத்து ஏற்படும் பகுதிகளில் மேற்கொள்கிறது,

சாலை பாதுகாப்பு நிதியில் 2574 பணிகள் ரூ.250 கோடி மதிப்பிலும் மற்றும் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 1343 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.342.28 கோடி மதிப்பிலும், நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2021-22 ஆம் ஆண்டில், சாலை விபத்துகளைக் குறைப்பதற்கும் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும், விபத்துப்

பகுதிகளை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சாலை பாதுகாப்பு திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ.350 கோடி மதிப்பிலான பணிகளை செய்வதற்கு அறிவிக்கப்பட்டது. இதன்படி, ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 401 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.200.00 கோடி மதிப்பிலும் மற்றும் சாலை பாதுகாப்பு நிதியின் கீழ் 99 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.100 கோடி மதிப்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் மூலம் 3 ஆண்டுகளில் நடைபெற்ற சாலை விபத்துகளின் அடிப்படையில் விபத்து கரும்புள்ளி பகுதிகள்

அடையாளம் காணப்பட்டு அதனை சீரமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

2015 - 2018 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற விபத்துக்களின் மூலமாக, 1208 கரும் புள்ளிகள் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டன. அவற்றில், 1108 கரும் புள்ளிகளுக்கு தற்காலிக தீர்வு செய்யப்பட்டது (இதரவற்றிற்கு தற்காலிக தீர்வு தேவைப்படவில்லை). இதில், 326 கரும் புள்ளிகளுக்கு நிரந்தர தீர்வும் செய்யப்பட்டுள்ளது. மேலும் 482 கரும் புள்ளிகளில் நிரந்தர தீர்வு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II இன் கீழ் ரூ.120.00 கோடி செலவில் சாலை பாதுகாப்பு பணிகள் உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கூறுகளின் கீழ் பின்வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன:

- கிழக்கு கடற்கரைச் சாலையில் தானியங்கி வேக அமலாக்க அமைப்பு மற்றும் மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை அமைப்பு நிறுவப்பட்டு e-Challan உருவாக்க ITMS செயலாக்கத்துடன் ஒருங்கிணைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

- காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சுமார் 1487 கி.மீ. தூரத்திற்கு சாலை பாதுகாப்பு தணிக்கை செய்யப்பட்டு அதில் சர்வதேச சாலை மதிப்பீட்டுத் திட்டம் (iRAP) கணக்கெடுப்பு மூலம் 528 கி.மீ. சாலைகள் அளவை செய்யப்பட்டு 95.60 கி.மீ. காஞ்சிபுரம் (30.80 கி.மீ.) & திருவண்ணாமலை (64.80 கி.மீ.) ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பான மாதிரி வழித்தடத் திட்டப் பணிகள் (4 தொகுப்புகள்) முன்னேற்றத்தில் உள்ளன.

- சாலை பாதுகாப்பு மாதிரி வழித்தட செயலாக்கத்திற்கான நுட்பமான

போக்குவரத்து அமைப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அவசர விபத்து சிகிச்சை மையத்திற்கு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுவதற்கான தொகை ரூ.3.98 கோடி தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு (TNMSC) டெபாசிட் செய்யப்பட்டு கொள்முதல் தொடங்கப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு மாதிரி வழித்தடத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கான அவசர விபத்து சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வாங்குதல் ஆகியவை எடுக்கப்பட்டு, அதற்கான தொகை ரூ. 12.65 கோடி தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. ஆம்புலன்ஸ் கொள்முதல் செய்யப்பட்டு

தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்கு (TNHSP) விரைவில் வழங்கப்படும்.

- 108 ஆம்புலன்ஸ் அவசர ஊர்தியின் செயலாக்கம், விபத்துப் பகுதி அறிதல், சென்றடைவதற்கான வழித்தடம் போன்ற தரவுகளை பகுப்பாய்வு செய்தல் போன்றவற்றை IIT சென்னை ஆலோசனை மூலம் பகுப்பாய்வினை தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மேற்கொள்ளவுள்ளது. இதற்கான பணி நடைபெற்று வருகின்றது.

- காவல் துறைக்கு பாதுகாப்பு மாதிரி வழித்தடத்திற்கான அமலாக்கம் தொடர்பான வாகனம் மற்றும் உபகரணங்களை வாங்க காவல் துறைக்கு ரூ.82,67,222/- வைப்பு நிதியாக வழங்கப்பட்டு கொள்முதல் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு விரைவில் வழங்கப்படும்.

## சாலை பாதுகாப்பு அலகு

ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் எட்டு கோட்டப் பொறியாளர்களுடன், நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளின் சரியான தன்மையைக் கண்காணித்து, செயல்படுத்தி, உறுதி செய்யும் நோக்கத்துடன் பிரத்யேகமாக சாலை பாதுகாப்பு அலகு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் விபத்துகளை குறைக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ”விபத்தில்லா தமிழகம்” உருவாக்க துறையின் பொறியாளர்கள் பயன்பெறும் வகையில் ’சாலை பாதுகாப்பு பொறியியல்’ குறித்த சிறப்பு தொடர் பயிற்சி திட்டம் 15.12.2021 அன்று தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக 400 பொறியாளர்களுக்கு பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது

நாமக்கல், செங்கல்பட்டு மற்றும் உதகையில் பல்வேறு துறைகள், வாகன உரிமையாளர்கள் சங்கங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

மாண்புமிகு முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியும், தற்போது சாலை பாதுகாப்புக்கான உச்சநீதிமன்றக் குழுவின் தலைவருமான மாண்புமிகு நீதிபதி அபய் மனோகர் சப்ரே, 27.02.2022 அன்று சென்னையில் அனைத்துத் துறையினருடன் தமிழ்நாடு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுசெய்து, விபத்து மற்றும் உயிரிழப்புகளைக் குறைக்க தமிழ்நாடு அரசு மற்றும் நெடுஞ்சாலைத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

மதுரை – தொண்டி சாலை (பில்லூர் சந்திப்பு)



சாலை பாதுகாப்பு பணிக்கு முன்



சாலை பாதுகாப்பு பணிக்கு பின்

6A

# 7. முதன்மை இயக்குநர் அலுவலகம்

முதன்மை இயக்குநர் அலுவலகமானது நெடுஞ்சாலைத்துறையின் அனைத்து அலகுகளையும் ஒருங்கிணைத்து செயல்படுகிறது.

## 7.1 நிர்வாகம்

அனைத்து அலகுகளின் நிர்வாகம் மற்றும் பணியமைப்பு சார்ந்த அம்சங்கள் அனைத்தும் இவ்வலுவலகத்தின் பொறுப்பாகும்.

### 7.1.1 மனிதவள மேம்பாடு

இத்துறையானது 6699 பணியாளர்களுடன் செயல்படுகிறது. விவரம் பின்வருமாறு:

- முதன்மை இயக்குநர் / தலைமைப் பொறியாளர் — 10
- கண்காணிப்பு பொறியாளர் — 35

- கோட்டப் பொறியாளர் 169
- உதவி கோட்டப் பொறியாளர் 541
- உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் 1085
 803
- தொழில் நுட்ப பணியாளர்கள் 171
- கணக்குப் பிரிவு 3885
- நிர்வாக பிரிவு மற்றும் இதர பணியாளர்கள்

### 7.1.2 நியமனங்கள்

2021-22 ஆம் ஆண்டில், 4 தட்டச்சர்கள், 12 உதவியாளர்கள், 2 உதவி வரைவாளர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 7.2 தகவல் தொழில் நுட்பக் குழுமம் (IT Cell - Information Technology Cell)

தகவல் தொழில்நுட்பக் குழுமம் பல்வேறு நெடுஞ்சாலைகள் தொடர்பான மென்பொருள் அமைப்புகளை உருவாக்குதல், பராமரித்தல்

மற்றும் மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தற்போது துறையின் பயன்பாட்டில் உள்ள முக்கிய வலைத்தள அடிப்படையிலான மென்பொருள்கள் (Web based Software) விவரம் பின்வருமாறு:

1. **சாலை பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு (RMMS)** - மாநிலத்தின் சாலை கட்டமைப்பு முழுவதையும் நிர்வகிக்க உதவுகிறது.
2. **புவியியல் தகவல் அமைப்பு (GIS)** - இது சாலை பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பில் (RMMS) உள்ள விவரங்களை புவிவெளி வடிவில் பார்வையிட உதவுகிறது.
3. **தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் திட்ட கண்காணிப்பு அமைப்பு (TNHPMS)** – வலைத்தள அடிப்படையிலான இந்த

அமைப்பானது, துறையின் அனைத்து அலகுகளின் பணிகளின் முன்னேற்ற நிலையை கண்காணிக்க உதவுகிறது.

நெடுஞ்சாலைத்துறையின் பின்வரும் இணைய தளங்கள் தகவல் தொழில்நுட்பக் குழுமம் மூலம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன:

1. https://www.tnhighways.tn.gov.in
2. https://www.tnrsp.tn.gov.in
3. https://www.ckicp.tn.gov.in

### 7.3 தொழில்நுட்பக் குழுக்கள்

**பொறியாளர்கள் குழுமம்** (BoE) தொழில் நுட்பம் குறித்த கொள்கை முடிவுகளை எடுப்பதற்கான உயர்மட்ட குழுவாகும். இக்குழு முதன்மை இயக்குநர், அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஆகியோரை உள்ளடக்கியது.

**ஒப்பந்தப்புள்ளி ஆணையம்** (CoT) ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் வழிமுறையினை முறைப்படுத்தும் குழுவாகும். இது முதன்மை இயக்குநர், அரசு நிதித்துறை செயலர் / பிரதிநிதி, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மற்றும் சம்பந்தப்பட்ட பணியின் தலைமைப் பொறியாளர்களை உள்ளடக்கியது.

**திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான குழு** (RASC) நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளின் மதிப்பில் ஏற்படும் மாறுதல்களை ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்யும் குழுவாகும். இக்குழு முதன்மை இயக்குநர், சம்பந்தப்பட்ட பணியின் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு), அரசு கூடுதல் / துணைச் செயலாளர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்

துறை) மற்றும் அரசு துணைச் செயலாளர் (நிதித் துறை) ஆகியோரை உள்ளடக்கியது.

**தொழில்நுட்ப தணிக்கை குழு** (TAC) திட்டப் பணிகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக முதன்மை இயக்குநர், இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் அனைத்து தலைமைப் பொறியாளர்களை உள்ளடக்கிய குழுவாகும்.

நெடுஞ்சாலைத்துறையின் தொழில்நுட்ப ஒப்புதலுக்கான அதிகார வரம்பினை கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு ரூ.7 கோடி வரை எனவும், தலைமைப் பொறியாளர்களுக்கு ரூ.7 கோடிக்கு மேல் எனவும் உயர்த்தி அரசாணை 21.01.2022 அன்று வெளியிடப்பட்டது,

# 8. கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகானது, தலைமைப்பொறியாளரின் கீழ் 9 வட்டங்கள் மற்றும் 44 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகின்றது. இந்த அலகால் 63956 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. பெரும்பான்மையான சாலை உட்கட்டமைப்புப் பணிகளான அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், மேம்படுத்துதல், சாலையின் ஓடுதள மேம்பாடு, உயர்மட்ட சாலைகள், சாலை மேம்பாலங்கள், ஆற்றுப்பாலங்கள், சிறுபாலங்கள் கட்டுதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக கட்டுதல், நகர்ப்புற மேம்பாடு, சாலை பாதுகாப்பு மற்றும் நிரந்தர வெள்ள சீரமைப்பு போன்ற பணிகள்

இவ்வலகின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 8.1 முக்கிய முன்னெடுப்புகள்

### 8.1.1 முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத்திட்டம்

2021-22 வரவு செலவு திட்டத் தொடரின் போது, மாவட்ட தலைமையிடங்கள் மற்றும் வட்ட தலைமையிடங்களை இணைக்கும் 2200 கி.மீ. நீளமுள்ள முக்கிய மாநில நெடுஞ்சாலைகள் போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில், அடுத்த 10 ஆண்டுகளில் நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 6700 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இரண்டு வழித்தடச் சாலைகளாகவும் “முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத்திட்டம்” என்ற புதிய திட்டத்தின் கீழ் அகலப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

“முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம்” என்பது சாலை இணைப்பு மற்றும் போக்குவரத்து செறிவு ஆகியவற்றை பொறுத்து சாலையை அகலப்படுத்த ஏற்படுத்தப்பட்ட முன்னோடி திட்டம் ஆகும்.

2021-22 ஆம் ஆண்டில், போக்குவரத்து செறிவு மற்றும் சாலை இணைப்பின் அடிப்படையில் 255.02 கி.மீ. நீளமுள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலைகள் ரூ.2123.64 கோடி செலவில் 4 வழிச்சாலையாகவும், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் உள்ள 639.10 கி.மீ. நீளமுள்ள இடைவழித்தடச்சாலைகள் ரூ.865.35 கோடி செலவில் இருவழித்தடச்சாலையாகவும் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் மூலம் எடுத்து

கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் முக்கிய பணிகள் பின்வருமாறு:**

1. விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.160.00 கோடி மதிப்பில் திண்டிவனம் – மரக்காணம் இருவழித்தட சாலையில் கி.மீ.0/0-4/0-ல் கடின புருவங்களுடன் கூடிய நான்குவழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் கி.மீ.4/0-16/0-ல் அகலப்படுத்துதல்/ உறுதிப்படுத்தும் பணி மற்றும் குறுக்கு வடிகாலை அகலப்படுத்துதல், புனரமைத்தல் RCC வடிகால் கட்டுதல், மையத்தடுப்பான், பேருந்து நிறுத்தம், பேவர் பிளாக் மற்றும் தடுப்புச்சுவர் கட்டுதல்.
2. திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.140.00 கோடி மதிப்பில் கடலூர் – சித்தூர்

சாலையை கி.மீ.84/7-104/2-ல் இருவழித்தட சாலையை நான்கு வழித்தடச்சாலையாக அகலப்படுத்தும் பணி மற்றும் மையத்தடுப்பான், வடிகால், தடுப்புச்சுவர், பாலங்கள் கட்டுதல், சிறுபாலங்களை அகலப்படுத்துதல் / புனரமைத்தல், கற்கள் பதித்தல் (Paver Block).

3. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.108.50 கோடி மதிப்பில் தாம்பரம் – முடிச்சூர் – திருப்பெரும்புதூர் சாலையை கி.மீ.11/6-20/0-ல் இருவழித்தடத்தை நான்குவழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மற்றும் கி.மீ.11/8-ல் பாலம் கட்டுதல், கி.மீ.15/4-ல் பாலம் அகலப்படுத்துதல், கி.மீ.16/6-ல் உயர்மட்ட பாலம் அகலப்படுத்துதல், குறுக்கு வடிகால் அமைத்தல்.

4. திருச்சி மாவட்டத்தில் ரூ.74.80 கோடி மதிப்பில் சென்னை – திருச்சி –

திண்டுக்கல் சாலையில் கி.மீ.325/6 - 333/0-ல் பல்வழித்தடச்சாலையை கடின புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், பெட்டி சிறுபாலம் (Box Culvert) புனரமைத்தல், சிறுபாலம் அகலப்படுத்துதல், தடுப்புச்சுவர், வடிகால் மற்றும் மையத்தடுப்பான் அமைத்தல்.

5. மதுரை மாவட்டத்தில் ரூ.50.60 கோடி மதிப்பில் திருச்சி – விராலிமலை – மேலூர் – மதுரை – அருப்புக்கோட்டை – தூத்துக்குடி சாலை (கைவிடப்பட்ட தே.நெ.45பி – மதுரை நகரப் பகுதி) கி.மீ.116/0-121/0-ல் நான்கு வழித்தடத்தைக் கடின புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடத்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மற்றும் சிறுபாலம் புனரமைத்தல் மற்றும் அமைத்தல், நடைபாதையுடன் கூடிய வடிகால், மையத்தடுப்பான், சாலை சந்திப்பு

மேம்பாட்டுப் பணிகள், பேருந்து நிறுத்தம் அமைத்தல்.

**இருவழித்தடமாக அகலப்படுத்தும் முக்கிய பணிகள் பின்வருமாறு:**

1. நாமக்கல் மாவட்டத்தில் ரூ.15.50 கோடி மதிப்பில் வடுகுப்பட்டி - அலங்காநத்தம் சாலை கி.மீ.2/8-4/6-ல் இடை வழித்தடத்தை இருவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் மற்றும் கி.மீ.3/10-ல் உள்ள குழாய் சிறுபாலத்தை பெட்டி சிறுபாலமாகப் புனரமைத்தல் மற்றும் கி.மீ.2/8-4/6-ல் தடுப்புச்சுவர் அமைத்தல்.
2. புதுக்கோட்டை மாவட்டத்தில், ரூ.7.23கோடி மதிப்பில் புதுக்கோட்டை-ஏம்பல் சாலை கி.மீ.38/0-40/6, 41/0-42/4, 44/0-45/6ல் இடைவழித்தடத்தை இருவழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்துதல் பணி மற்றும் கி.மீ.38/2, 39/4, 40/6, 41/2 (i), 41/2 (ii), 41/4, 41/6,

45/2, 45/6, 44/2, 44/6 (i), 44/6(ii), 44/10ல் சிறுபாலங்கள் புனரமைத்தல், கி.மீ.38/8 மற்றும் 38/10ல் தடுப்புச்சுவர் அமைத்தல்

3. தென்காசி மாவட்டத்தில் ரூ.6.86 கோடி மதிப்பில் சங்கரன்கோவில் – திருவேங்கடம் சாலை கி.மீ.0/8 - 4/8, 6/4-7/4, 8/0-9/0-ல் இடைவழித்தடத்தை இருவழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் தடுப்புச்சுவர், வடிகால், குறுக்கு வடிகால், பேவர் பிளாக் அமைத்தல்.

4. கோயம்புத்தூர் மாவட்டத்தில், ரூ.6.78 கோடி மதிப்பில் மதுக்கரை-செட்டிப்பாளையம் சாலை கி.மீ.4/4-7/0ல் இடைவழித்தடத்தை இருவழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மற்றும் கி.மீ.6/2 மற்றும் 6/6ல் குறுக்கு வடிகால், கி.மீ.4/6, 6/6-7/0ல் தடுப்புச் சுவர் அமைத்தல்.

5. கடலூர் மாவட்டத்தில், ரூ.6.45 கோடி மதிப்பில் திட்டக்குடி-சிறுபாக்கம் சாலை (வழி) அவட்டி, மா.புடையூர் சாலை கி.மீ.1/4-2/4 மற்றும் 18/0-22/2ல் இடைவழித்தடத்தை இருவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி மற்றும் குறுக்கு வடிகால் அமைத்தல்.

### 8.1.2 தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக மேம்படுத்துதல்

மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் தரைப்பாலங்கள் தண்ணீரில் மூழ்குவதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு அருகாமையிலுள்ள மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், சரக்கு போக்குவரத்து, விளைபொருள்களை சந்தைப்படுத்துதல் பாதிக்கப்படுகிறது. பள்ளி செல்லும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

2021-2022 மானிய கோரிக்கையின்போது 1281 தரைப்பாலங்கள் உயர்மட்ட பாலங்களாக மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிதியாண்டில் மூன்று நாட்களுக்கும் மேலாக வெள்ளத்தில் மூழ்கும் தரைப்பாலங்கள் மற்றும் 30 மீட்டருக்கும் குறைவாக உள்ள 648 சிறிய தரைப்பாலங்கள் ரூ.551.23 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலங்களாக ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2021-2022ன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அப்பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள தரைப்பாலங்கள் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

### 8.1.3 நகர்ப்புற மேம்பாட்டுப்பணி

நகரப்பகுதிகளில், உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, 2021 -2022 மானிய

கோரிக்கையின் போது நகர்ப்புற மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தேவையான இடமிருப்பின் கடின புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்தப்படும். இடவசதி இல்லாத பகுதிகளில் நெடுஞ்சாலை எல்லைக்குட்பட்ட பகுதி வரை சாலைகள் அகலப்படுத்தப்படும் எனவும், மழைநீர் தேங்குவதை தடுப்பதற்காக நடைபாதைகளுடன் கூடிய வடிகால்கள் கட்டப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நகர்ப்புற மேம்பாட்டுப்பணிகளுக்கு 10% நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அரசாணை அளிக்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த

சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.412.69 கோடி செலவில் 96.267 கி.மீ. நீளச்சாலைகளை மேம்படுத்தும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 8.2 முக்கிய திட்டங்கள்

### 8.2.1 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு அரசின் முதன்மைத் திட்டமாகும். இதன் மூலம் பெரும்பான்மையான சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டு பணிகளான சாலைகளை அகலப்படுத்துதல்,

உறுதிப்படுத்துதல், சாலையின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், சிறுபாலங்கள், உயர்மட்ட பாலங்கள் கட்டுதல், சாலை பாதுகாப்பு போன்ற பணிகள் முழுமையாகவும் ஒருங்கிணைந்த முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 8.2.1.1 ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாநில நெடுஞ்சாலைகள்

2021-22 ஆம் நிதி ஆண்டில் 362.32 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 35 பாலங்கள்/சிறுபாலங்கள் ஆகியவை ரூ.675.69 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

கூடுதலாக, நிலுவைப்பணிகளாக, 398.94 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள், 82

பாலங்கள்/சிறுபாலங்கள் ஆகியவை ரூ.1573.59 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதில், 313 கி.மீ. நீள சாலைப்பணிகளும், 73 பாலங்கள் / சிறுபாலங்கள் பணிகளும் ரூ.1027.16 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1650 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2.1.2 ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட முக்கிய சாலைகள்

2021-22 ஆம் நிதி ஆண்டில், 266.91 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள், 58 பாலங்கள் / சிறுபாலங்கள் ஆகியவை ரூ.326.16 கோடி

மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

இதுதவிர, நிலுவைப் பணிகளாக, 629.27 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள், 107 பாலங்கள்/சிறுபாலங்கள் ஆகியவை ரூ.1050.16 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதில், 457 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 90 பாலங்கள் / சிறுபாலங்கள் பணிகளும் ரூ.696.50 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2.1.3 ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாவட்ட இதர சாலைகள்

2021-22 ஆம் நிதி ஆண்டில் புதிய பணிகளாக, 1133.61 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள், 159 பாலங்கள்/சிறுபாலங்கள் ஆகியவை ரூ.1146.37 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

இதுதவிர, நிலுவைப்பணிகளாக, 1274.27 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள், 454 பாலங்கள் / சிறுபாலங்கள் ஆகியவை ரூ.1679.88 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதில், 926 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 404 பாலங்கள் / சிறுபாலங்கள்

பணிகளும் ரூ.1117.57 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1450 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2.1.4 ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்- சிறப்புக் கூறு திட்டம்

2021-22ஆம் நிதி ஆண்டில், 140.39 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் ரூ.146.47 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

நிலுவைப்பணிகளாக, 167.39 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள், 6 பாலங்கள்/ சிறுபாலங்கள் கட்டுதல் ஆகியவை

ரூ.183.00 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதில், 129 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 4 பாலங்கள் / சிறுபாலங்கள் பணிகளும் ரூ.94.34 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.197 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2.1.5 சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம் (IRQP)

2021-22 ஆம் நிதி ஆண்டில், 2386.60 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் ரூ.768.91 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

இதுதவிர, நிலுவைப்பணிகளாக, 1806 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும்

மேம்படுத்துதல் பணிகள், ரூ.619.63 கோடி செலவில் செயலாக்கத்தில் உள்ளன.

இதில், 1562 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.427.98 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.550 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2.2 விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகரப் பகுதிகள் மேம்பாடு

விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெருநகரப் பகுதிகளில், சாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் பல கட்டங்களாக நடைபெற்று வருகின்றன. சென்னை மற்றும் திருவள்ளூர் ஆகிய கோட்டங்களில் 20 நிலுவைப் பணிகள் ரூ.367.31 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவற்றுள் 10 பணிகள்

முடிக்கப்பட்டு மீதமுள்ள 10 பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.2.3 சென்னையின் முக்கிய இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல்

சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நகரமயமாதல் மற்றும் தொழிற்சாலைகள் வளர்ச்சி போன்றவற்றை கருத்தில் கொண்டு முக்கிய சாலைகள் இணைப்பு கட்டம்-II ல் 40.25 கி.மீ. நீளமுள்ள 9 சாலைப் பணிகள் ரூ.165.06 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.165.06 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 1 பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள 8 பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.2.4 புறவழிச்சாலைகள் அமைத்தல்

நடைபெற்று வரும் பணிகள்-3

கட்டுமானத்திற்கு முந்தைய நிலையிலுள்ள பணிகள்-3

நில எடுப்புப் பணிகள்-15

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு-23.

### 8.2.5 சாலை மேம்பாலங்கள் கட்டுதல்

நடைபெற்று வரும் பணிகள்-1

நில எடுப்பு -1

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு -1.

### 8.2.6 உயர்மட்ட சாலைகள்

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு -6

### 8.2.7 உயர்மட்ட பாலங்கள்

நடைபெற்று வரும் பணிகள்-2

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு -1

### 8.2.8 சாலை பாதுகாப்புப் பணிகள்

2021-22 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்

திட்டத்தில் 401 எண்ணிக்கையிலான சாலை பாதுகாப்புப் பணிகளுக்கு ரூ.200.00 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

சாலை பாதுகாப்பு நிதியின் கீழ் ரூ.100 கோடி மதிப்பில் 99 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.231 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.2.9 வெள்ளச் சீரமைப்பு பணிகள்

வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்ட நிலுவைப்பணிகளாக ரூ.352.41 கோடியில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

2021-22-ஆம் ஆண்டில். நிரந்தர வெள்ள தடுப்புப் பணிகளான கூடுதல் பாலங்கள், கூடுதல் வழிகள், சிறுபாலங்கள், குழாய் பாலங்களை மாற்றுதல், வடிகால் அமைத்தல், சேதடைந்த பாதுகாப்புப்பணிகளை புனரமைத்தல், மற்றும் இயந்திரங்கள், பம்ப்செட் மற்றும் ஜெனரேட்டர்கள் வாங்குதல் போன்றவை, ரூ.392.16 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழையின் போது பாதிக்கப்பட்ட சாலை கட்டுமானங்களை சீரமைக்க மாநில பேரிடர் நிவாரண நிதியின் மூலம் தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.17 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**8.3 பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகள்**

சாலைகளின் முறையான பராமரிப்பிற்காக ரூ.694.63 கோடி செலவிடப்பட்டு 2434 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு, ரூ765.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.4 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.5437.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.6728.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கரணையில் 25.09.2021 அன்று பருவமழை

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்

8A

# 9. தேசிய நெடுஞ்சாலை

தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலைகள் அலகு தலைமைப் பொறியாளரின் கீழ் 4 வட்டங்கள் மற்றும் 13 கோட்டங்களுடன் செயல்படுகிறது. தேசிய நெடுஞ்சாலை பணிகளில் தரக் கட்டுப்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்ய 4 தரக் கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் ஒரு கண்காணிப்புப் பொறியாளரால் கூடுதலாக கண்காணிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 6606 கி.மீ. ஆகும். இச்சாலைகள் ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு மேம்படுத்தப்பட்டு, பராமரிக்கப்படுகின்றன. 1511 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்

கட்டுப்பாட்டிலும், மீதமுள்ள 5095 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் செயல்பாடுகள் கீழ்கண்டவாறு:

- தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்
- ஆற்றுப்பாலங்கள் / மேம்பாலங்கள் / இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல்
- வெள்ளச் சேதங்களை சீரமைக்கும் பணிகள்.

**9.1 ஆண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் பணிகள்**

ஆண்டுப் பணிகள் ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தினால் ஒதுக்கப்படும் நிதியின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

### 9.1.1 திட்டப்பணிகள் – தே.நெ. (மூலப்பணிகள்)

2021-22 ஆம் ஆண்டில், ரூ.2167.03 கோடி மதிப்பில் 267.35 கி.மீ. நீளத்திற்கு 53 சாலைப் பணிகளும் மற்றும் 18 பாலப் பணிகளும் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்பணிகளில் 170.85 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகளும் மற்றும் 3 பாலப்பணிகளும் தற்போது முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021-22 நிதியாண்டில், ரூ.2791.26 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**ஆண்டுத்திட்டம் 2021 - 22ல் – ஒப்புதல் பெறப்பட்டுள்ள பணிகள்**

| பணிகளின் வகைபாடு | பணிகளின் எண்ணிக் கை | நீளம் கி.மீ-ல் | மதிப்பு ரூ. (கோடி) |
|---|---|---|---|
| புறவழிச்சாலை - நிலம் கையகப்படுத்தும் பணிகள் (வேலூர், வேட்டவலம்) | 2 | 25.50 | 145.54 |
| புறவழிச்சாலை - கட்டுமானப் பணிகள் (திருவையாறு, பாகலூர், மதுரை அச்சம்பத்து-விராட்டிப்பத்து, குடியாத்தம்) | 4 | 22.08 | 741.32 |
| நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் | 6 | 86.03 | 545.45 |

| பணிகளின் வகைபாடு | பணிகளின் எண்ணிக் கை | நீளம் கி.மீ-ல் | மதிப்பு ரூ. (கோடி) |
|---|---|---|---|
| கடின புருவங்களுடன் கூடிய இரு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் | 6 | 97.09 | 405.52 |
| மேம்பாலப் பணிகள் | 3 | - | 282.21 |
| வாகன சுரங்கப்பாதை பணிகள் | 2 | - | 43.39 |
| இரயில்வே மேம்பாலப் பணிகள் | 1 | - | 43.39 |
| உயர்மட்ட பாலப் பணிகள் | 3 | - | 29.74 |
| சிறு பாலங்கள் | 4 | - | 28.03 |
| சாலைகளை உறுதிபடுத்தும் பணிகள் | 14 | 251.88 | 426.13 |
| சாலை பாதுகாப்பு பணிகள் | 9 | 5.80 | 100.54 |
| **மொத்தம்** | **54** | **488.38** | **2791.26** |

மேலும் கூடுதலாக 33 விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்கு ஆண்டுத் திட்டம் 2021-22ன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2021-22 நிதியாண்டில், ஒப்புதல் பெறப்பட்ட பணிகளில் 14.30 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2021-22 நிதியாண்டில், ஆண்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1150.89 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 9.1.2 சாலை பாதுகாப்பு பணிகள்

மாநில தேசிய நெடுஞ்சாலை அலகினால் பராமரிக்கப்படும் தேசிய நெடுஞ்சாலைகளில் 196 பகுதிகள் கரும்புள்ளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

## கரும்புள்ளிகளின் விவரங்கள்

| விளக்கம் | கரும்புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மொத்த கரும்புள்ளி / விபத்து பகுதிகள் | 196 |
| முடிவுற்ற நிரந்தர சீரமைப்பு பணிகள் | 92 |
| முன்னேற்றத்தில் உள்ள நிரந்தர சீரமைப்பு பணிகள் | 48 |
| ஒப்பந்தப்புள்ளி/விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ளவை. | 39 |
| இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட கருத்துருக்கள் | 17 |

## 9.2 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள் (Centrally Sponsored Schemes)

### ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி (CRIF)

2021-22 ஆம் ஆண்டில், ரூ.476.02 கோடி மதிப்பில் 66.72 கி.மீ. நீளமுள்ள 15 சாலைப் பணிகள் மற்றும் 5 பாலப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில், 47.57 கி.மீ. நீளத்திற்கு 10 சாலைப் பணிகளும், 4 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021-22 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி திட்டத்தில் 102.93 கி.மீ. நீளத்திற்கு 23 சாலைப் பணிகள் மற்றும் 24 பாலப் பணிகளுக்கான கருத்துரு ரூ.582.30 கோடி மதிப்பீட்டில்

ஒன்றிய அமைச்சகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

2021-22 நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.301.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022-23 நிதியாண்டில் நிதி நிலை அறிக்கையில் ரூ.415.00 கோடி ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி பணிகளுக்காக தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 9.3 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் கிராமச் சாலைகளை மேம்படுத்தி, சாலை வசதி இல்லாத வாழ்விடங்களுக்கு சாலை இணைப்பை ஏற்படுத்தி வறுமை நிலையினை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. ஒன்றிய அரசு மாவட்ட

இதர சாலைகளை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டத்தில் பராமரிப்புப் பணிகளுக்கான நிதி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2021-22 நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.2.48 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022-23 நிதியாண்டில், நிதிநிலை அறிக்கையில் ரூ.1.77 கோடி பராமரிப்புப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.4 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் வாயிலாக வைப்பு நிதியின் கீழ் மேம்படுத்துதல்**

கீழ்க்கண்ட பணிகள் வைப்பு நிதியின் கீழ் செயல்பாட்டில் உள்ளன:

| பணியின் பெயர் | நீளம் கி.மீ. | மதிப்பு ரூ. (கோடி) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| தே.நெ.45-ல் வண்டலூர் முதல் செட்டிப்புண்ணியம் வரை உள்ள சாலையினை 4 வழித்தடத்திலிருந்து 8 வழித்தடச் சாலையாக அகலப்படுத்துதல். | 18.60 | 275.17 | 5.30 கி.மீ. நீளத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| தே.நெ.4-ல் மதுரவாயல் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் சுங்கச் சாவடி வரை உள்ள சாலையினை 4 வழித்தடத்திலிருந்து 6 வழித்தடச் சாலையாக அகலப்படுத்துதல் | 23.20 | 428.95 | சிறுபாலப் பணிகள், சாலையோர வடிகால்வாய் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| தேசிய நெடுஞ்சாலை 544 H தொப்பூர் - மேட்டூர் - பவானி - ஈரோடு சாலையைக் கடின புருவங்களுடன் கூடிய 2 வழித்தடச் சாலையாக அகலப்படுத்தும் பணி | 76.75 | 183.47 | பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது |

## 9.5 சேது பாரதம் திட்டம் - தேசிய நெடுஞ்சாலைகளில் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அனைத்து இரயில்வே கடவுகளுக்கும் மாற்றாக இரயில்வே மேம்பாலங்கள் / இரயில்வே கீழ் பாலங்கள் அமைக்க ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் இலக்கு கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 6 இரயில்வே கடவுகளில் (கடவு எண். 17 – செக்கானூரணி (மதுரை), கடவு எண். 68 – தேனி (தேனி), கடவு எண். 85 – போடிநாயக்கனூர் (தேனி), கடவு எண். 109A – கண்ணமங்கலம் (வேலூர்), கடவு எண். 86 – எட்டிவாடி (திருவண்ணாமலை), கடவு எண். 503 – தென்காசி (தென்காசி) ரூ.402.70 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டும்

பணியினை ஆண்டுத் திட்டத்தில் மேற்கொள்ள ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில், 5 இரயில்வே மேம்பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள ஒரு பணிக்கான நில எடுப்பு முன்னேற்ற நிலையில் உள்ளது. இப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**9.6 தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்துதல்**

ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால், 500 கி.மீ. நீளமுள்ள 8 மாநில சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்த கொள்கை அளவில் 2018-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்குரிய அறிவிப்பாணையை இந்திய அரசின்

அரசிதழில் வெளியிட அமைச்சகத்தை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### 9.7 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகள்

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள் / பாரத்மாலா பரியோஜனா திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. துறைமுகங்களை இணைக்கும் சாலை மற்றும் பால கட்டமைப்புகள் மற்றும் பிற சிறப்புத் திட்டங்களை மேற்கொள்கிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்டங்கள் அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தொடங்கப்பட்டது

முதல், 3051 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.22495 கோடி மதிப்பில் கடின தள புருவங்களுடன் கூடிய ஆறு / நான்கு / இரு வழித் தடங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

**இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய பணிகளின் பல்வேறு நிலைகள்**

| பணிகளின் எண்ணிக் கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு ரூ. (கோடி) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 31 | 1381.00 | 31670.00 | 665.86 கி.மீ. நீளத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7 | 191.06 | 9126.85 | பணிகள் வழங்கப்பட்டு பணி நியமன தேதி வெளியிடப்பட உள்ளது. |

| பணிகளின் எண்ணிக் கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு ரூ. (கோடி) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 7 | 183.26 | 6192.00 | 2021-22 நிதியாண்டில் பணிகள் வழங்கப்பட்டுள்ளது |
| 6 | 174.12 | 3361.00 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. |
| 19 | 1225.00 | - | விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ளது. |

## 9.8 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாநில அரசின் ஒத்துழைப்பு

நில எடுப்பு, பல்வேறு அனுமதிகள், சேவை உபகரணங்களை மாற்றியமைத்தல் ஆகிய முன் கட்டுமான நடவடிக்கைகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது. நீண்டகாலமாக உள்ள இடர்ப்பாடுகளைக்

களைவதற்கு அமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் முதன்மை செயலாளர் மட்டங்களில் கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்வு காணப்பட்டதால் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## 9.9 பாரத்மாலா பரியோஜனா

பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின்கீழ் பொருளாதார வழித்தடங்கள், இடை வழித்தடங்கள் மற்றும் இணை வழிகள், தேசிய வழித்தட திறன் மேம்பாடு, எல்லை மற்றும் சர்வதேச இணைப்பு வழித்தடச் சாலைகள், கடலோர மற்றும் துறைமுக இணைப்புச் சாலைகள், பசுமைவழி விரைவுச் சாலைகள் ஆகியவை மேம்பாட்டிற்காக கண்டறியப்பட்டு உள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2785 கி.மீ. நீளமுள்ள 48 திட்டப் பணிகளுக்கு (தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டத்தில் எடுக்கப்பட்டு,

நிலுவையிலிருந்த பணிகளை உள்ளடக்கியது) விரிவான திட்ட அறிக்கை / சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி / நில எடுப்பு மற்றும் முன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பின்னர், இப்பணிகள் பல்வேறு கட்டங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 9.10 விபத்து கரும்புள்ளிகளை நீக்குதல்

**2015 முதல் 2018 வரை தமிழ்நாட்டில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படும் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள விபத்துகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ள கரும் புள்ளிகளின் விவரங்கள்**

| விளக்கம் | கரும்புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மொத்த கரும்புள்ளி / விபத்து பகுதிகள் | 495* |

| | |
|---|---|
| திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக முடிக்கப்பட்ட நிரந்தர சீரமைப்புப்பணிகள் | 184 |
| முன்னேற்றத்தில் உள்ள சீரமைப்பு பணிகள் | 120 |
| விரிவான ஆய்வில் இருக்கும் நிரந்தர சீரமைப்புப் பணிகள் | 191 |

* தற்காலிகச் சீரமைப்புப் பணிகள் அனைத்து கரும்புள்ளிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 9.11 சுங்க சாவடிகளில் 100% மின்னணு முறையில் சுங்கக் கட்டணம் வசூலித்தலைச் செயல்படுத்துதல்

ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் வழிகாட்டுதலை நடைமுறைப்படுத்தும் வகையில், மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 48 சுங்கச் சாவடிகளிலும் மின்னணு முறையில் உபயோகிப்பாளர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

48 சுங்கச் சாவடிகளிலும் உள்ள 428 தடங்களிலும் தடையற்ற பயணத்தை உறுதி செய்யும் வகையில், மின்னணு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் 15.02.2021 முதல் 100 சதவீதம் மின்னணு முறையில் அனைத்து சுங்கச் சாவடிகளிலும் பயனாளர் கட்டணம் வசூலிப்பதைக் கட்டாயமாக்கியுள்ளது, இதில், தற்சமயம் 95 சதவீதம் மின்னணு முறையில் கட்டணம் வசூலிக்கப்படுவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

# 10. நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்

நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகானது, ஒரு தலைமைப்பொறியாளரின் கீழ் 4 வட்டங்கள் மற்றும் 14 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகின்றது.

இந்த அலகானது நபார்டு கடனுதவி மற்றும் மாநில நிதியின் கீழ் பின்வரும் பணிகளை செயல்படுத்துகிறது:

- உயர்மட்ட ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்
- ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துதல்.
- புறவழிச்சாலைகளை அமைத்தல்.
- இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுதல்.

## 10.1 நபார்டு கடனுதவியின் கீழ் பாலங்கள் கட்டுதல் (ஆர்.ஐ.டி.எப்)

ரூ.414.06 கோடி மதிப்பில் 73 பாலங்களின் கட்டுதல் / திரும்பக் கட்டுதலுக்கான கருத்துரு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெற அனுப்பப்பட்டுள்ளது.

ஆர்.ஐ.டி.எப் திட்டத்தின் கீழ், ரூ.1108.13 கோடி மதிப்பீட்டில் 182 நிலுவைப் பாலப்பணிகள் மற்றும் புதிதாக ஒப்பளிக்கப்பட்ட 93 பாலப்பணிகள் ஆகியன எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றுள், 73 பாலங்கள் 2021-22ல் ரூ.189.44 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 202 பாலப் பணிகளின் முன்னேற்றம் வெவ்வேறு நிலைகளில் உள்ளன.

2022-23 ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்திற்காக ரூ.516.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.2 மாநில நிதியின் கீழ் பாலங்கள் கட்டுதல்

இத்திட்டத்தின் கீழ், ரூ.33.65 கோடி மதிப்பீட்டில் 5 பாலங்கள் நிலுவைப்பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றுள், 2 பாலங்கள் ரூ.10.41 கோடி செலவில் 2021-22ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 பாலப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2022-23 ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்திற்காக ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.3 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளைத் தரம் உயர்த்துதல்

2021-22 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, “**10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள் படிப்படியாக மாவட்ட இதர சாலைகளாகத் தரம்**

**உயர்த்தப்படும். அவற்றில், முதற்கட்டமாக சுமார் 2000 கி.மீ. நீளமுள்ள சாலைகள் நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படும்**" என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்த கொள்கை அளவில் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 3435.17 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளைத் தரம் உயர்த்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் நெடுஞ்சாலைத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, முதற்கட்டமாக 2000.31 கி.மீ. நீளமுள்ள சாலைகளை ரூ.2178.01 கோடி மதிப்பில் தரம் உயர்த்துவதற்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நிலுவைப் பணிகளாக, 2486.04 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகள் ரூ.2512.97 கோடி மதிப்பில் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றுள், 2021-22-ம் ஆண்டு 2140.84 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகள் ரூ.1949.27 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2022-23 ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்திற்காக ரூ.1032.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.4 மாநில நிதியின் கீழ் புறவழிச்சாலைகள் அமைத்தல்

12 புறவழிச்சாலைகள் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி ரூ.192.12 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டது. இவற்றுள், பவானி

புறவழிச்சாலைக்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றது. மீதமுள்ள 11 புறவழிச்சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

இவை தவிர, மற்றொரு புறவழிச்சாலையான, கூத்தாநல்லூர் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்திற்காக ரூ.112.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.5 மாநில நிதியின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில், அக்கரைப்பேட்டை மற்றும் கருவேலங்கடை

கிராமங்களை இணைக்கும் விதமாக 3.58 கி.மீ. நீளத்திற்கு புதிய இணைப்புச்சாலை அமைக்க ரூ.35 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 10.6 இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக, இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் அமைத்தல்

இரயில்வே கடவுக்குப் பதிலாக 10 இரயில்வே மேம்பாலங்கள், ஒரு இரயில்வே கீழ்ப்பாலம் ஆகிய பணிகள் ரூ.165.55 கோடி மதிப்பில் 2021-22 ஆம் ஆண்டில் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

2021-22 ஆம் ஆண்டில், ஒரு இரயில்வே மேம்பாலம் (கடவு எண்.7, அண்ணனூர்) ரூ.58.02 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**10.7 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.2315.83 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.1676.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 11. திட்டங்கள்

திட்டங்கள் அலகானது, தலைமைப் பொறியாளரின் கீழ் 4 வட்டங்கள் மற்றும் 10 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகின்றது.

இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து 50:50 பணப்பகிர்வின் அடிப்படையில் இரயில்வே திட்டப்பணிகளின் கீழ் இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் அமைப்பதுடன் உயர்மட்டப் பாலங்கள் அமைத்தல், பழுதடைந்த மற்றும் குறுகிய பாலங்களை திரும்பக் கட்டுதல், சாலை மேம்பாலங்கள் அமைத்தல், உயர்மட்ட சாலை வழித்தடம் அமைத்தல், புறவழிச்சாலைகள் மற்றும் வட்டச்சாலைகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் அலகின் முக்கிய பணிகளாகும்.

## 11.1 இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலங்கள் அமைத்தல்

2021-22 ஆம் ஆண்டில், 89 இரயில்வே மேம்பாலம்/ கீழ்ப்பாலங்கள் நிலுவைப்பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

- 44 கட்டுமானப்பணிகள்
- 32 பணிகள் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மற்றும் நில எடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவை
- 13 பணிகள் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டவை

கட்டுமானப் பணிகளுக்காக எடுக்கப்பட்ட 44 பணிகளில் 9 பணிகள் ரூ.287.47 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டன, 15 பணிகள் ரூ.505.94 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன, மீதமுள்ள 20

பணிகள் ரூ.562.55 கோடி மதிப்பில் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 32 பணிகளில், 10 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்று ரூ.121.46 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 22 பணிகளுக்கு ரூ.272.16 கோடி மதிப்பில் நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்ட 13 பணிகளில் 2 பணிகளுக்கு ரூ.0.43 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றது. மீதமுள்ள 11 பணிகளுக்கு ரூ.3.60 கோடி மதிப்பில்

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், ஒரு இரயில்வே மேம்பாலப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.0.32 கோடி நிர்வாக ஒப்புதல் அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

**2021-22ல் முடிக்கப்பட்ட பணிகள்**

1. திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூரில் கடவு எண்.21க்கு மாற்றாக ரூ.25.74 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
2. செங்கல்பட்டு மாவட்டம், ஊரப்பாக்கத்தில் கடவு எண். 36க்கு மாற்றாக ரூ.34.50 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
3. காஞ்சிபுரம் மாவட்டம், பொன்னேரிக்கரையில் கடவு எண். 29க்கு மாற்றாக ரூ.59.63 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.

4. விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூரில் கடவு எண். 88க்கு மாற்றாக ரூ.20.96 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
5. விழுப்புரம் மாவட்டம், மடப்பட்டில் கடவு எண். 144க்கு மாற்றாக ரூ.22.63 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
6. திருவண்ணாமலையில் கடவு எண். 55க்கு மாற்றாக ரூ.38.74 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
7. வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரத்தில் கடவு எண். 59க்கு மாற்றாக ரூ.22.27 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
8. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் கடவு எண்.122க்கு மாற்றாக ரூ.48.48 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம்.
9. திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் கடவு எண்.82பிக்கு மாற்றாக ரூ.14.52 கோடி மதிப்பில் இரயில்வே கீழ்ப்பாலம்.

## 11.2 மாநில நிதித் திட்டங்கள்

### சிறப்பு சாலை உள்கட்டமைப்பு

மாநில நிதியின் கீழ், 2021-22 ஆம் நிதி ஆண்டில் 118 பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

- 31 கட்டுமானப்பணிகள்
  - 4 பணிகள் ரூ. 163.09 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டன
  - 21 பணிகள் ரூ.1910.73 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன
  - 6 பணிகள் ரூ. 189.40 கோடி மதிப்பில் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன
- 17 விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு மற்றும் நில எடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்

- 5 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்று ரூ.25.45 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன
- 12 பணிகளுக்கு ரூ.275.73 கோடி மதிப்பில் நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன

• 70 விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பிற்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்

- 18 பணிகளுக்கு ரூ.1.12 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முடிவுற்றன
- 52 பணிகளுக்கு ரூ.11.51 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை

தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன

2021-22ல், ரூ.4.70 கோடி மதிப்பில் 2 புறவழிச்சாலைகள், 1 உயர்மட்ட சாலை, 2 சாலை மேம்பாலம் மற்றும் 2 இரயில்வே மேம்பாலப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2021-22ல் முடிக்கப்பட்ட பணிகள்**

1. தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவானைக்காவல் சாலை மற்றும் கல்லணை சாலையை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையில் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி ரூ.90.96 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.

2. திருவண்ணாமலை மாவட்டத்தில், தண்டரை - எரையூர் சாலையில் கி.மீ.0/8ல் செய்யாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டபாலம் கட்டும் பணி ரூ.17.04 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
3. மதுரை மாவட்டத்தில், மதுரை - தொண்டி சாலை கி.மீ. 3/2 மற்றும் மதுரை சுற்றுச்சாலை கி.மீ. 2/4 சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைக்கும் பணி ரூ.53.12 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
4. கடலூர் மாவட்டத்தில், ஜவான்ஸ்பவன் சாலை கி.மீ.0/0-1/8 மேம்பாடு செய்தல் பணி ரூ.1.97 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.

**11.3 தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் - திட்ட தயாரிப்பு நிதி**

14 இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலங்கள், 9 உயர்மட்ட பாலங்கள் மற்றும் 2 புறவழிச்சாலைப் பணிகளுக்கு ரூ.6.88 கோடி மதிப்பில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய - திட்ட தயாரிப்பு நிதியின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**11.4 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.503.76 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.1394.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 12. பெருநகரம்

பெருநகர அலகானது, தலைமைப் பொறியாளரின் கீழ் ஒரு வட்டம் மற்றும் 5 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகின்றது. இவ்வலகானது, சென்னை பெருநகரப் பகுதியில் (Chennai Metropolitan Area) சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்த உருவாக்கப்பட்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வு (CTTS-Comprehensive Traffic and Transportation Study) மற்றும் இரண்டாவது பெருந்திட்டத்தின் அடிப்படையில் திட்டப்பணிகள் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMDP-Chennai Metropolitan Development Plan) கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

சாலை மேம்பாலங்கள், உயர்மட்ட பாலங்கள், சாலை / பாலங்களை அகலப்படுத்துதல், இணைப்புச்சாலைகள் அமைத்தல்,

புறவழிச்சாலைகள் அமைத்தல், நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை பெருநகரப் பகுதியில் உள்ள இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் அமைத்தல் / அகலப்படுத்துதல் ஆகியவை இரயில்வே திட்டப்பணிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 12.1 மாநில நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMDP)

### 12.1.1 சாலை மேம்பாலங்கள் (Grade Separators)

முக்கிய சாலை சந்திப்புகளில், தடையற்ற போக்குவரத்திற்கும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், விபத்துகளை தடுக்கவும், நீண்டகால தீர்வாக சாலை மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

2021-22 ஆம் ஆண்டில்,

- கோயம்பேட்டில் சாலை மேம்பால பணி ரூ.93.50 கோடி மதிப்பிலும், வேளச்சேரி மேம்பாலம் அமைக்கும் பணியில் தரமணி இணைப்புச் சாலை - வேளச்சேரி புறவழிச்சாலை பாலப்பகுதி ரூ.67.00 கோடி மதிப்பிலும் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து விடப்பட்டுள்ளது.
- மேடவாக்கம் சாலை மேம்பாலப் பணியில் தாம்பரம் – வேளச்சேரி பாலப்பகுதி ரூ.95.21 கோடி மதிப்பிலும், வேளச்சேரி சாலை மேம்பாலப் பணியில் வேளச்சேரி புறவழிச்சாலை - தாம்பரம் பாலப்பகுதி ரூ.78.49 கோடி மதிப்பிலும் நடைபெற்று வருகின்றன.
- மத்திய கைலாஷ் சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.46.54 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- மவுண்ட் – பூந்தமல்லி - ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.314.48 கோடிக்கும் மற்றும் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு ரூ.45.50 கோடிக்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, மெட்ரோ இரயில் பணியுடன் ஒருங்கிணைந்த பணியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- திருவான்மியூர் சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு, நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- 11 சாலை மேம்பாலப் பணிகள் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ளது. இவற்றில் 10 சாலை மேம்பாலப் பணிகளுக்கு ரூ.983.32 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

### 12.1.2 ஆற்றுப்பாலங்கள்:

- திருவொற்றியூர் பக்கிங்காம் கால்வாய் மற்றும் பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே, 2 ஆற்றுப்பாலப் பணிகள் ரூ.77.01 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.
- நொளம்பூரில் கூவம் ஆற்றின் குறுக்கே ஆற்றுப்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.36.00 கோடி மதிப்பிற்கு நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பாடிக்குப்பத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே ஆற்றுப்பாலம் அமைக்கும் பணிக்கு நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 12.1.3 புதிய இணைப்புச் சாலைகள் அமைத்தல் / சாலைகளை அகலப்படுத்தும் பணிகள்:

பன்மடங்கு அதிகரித்து வரும் போக்குவரத்து தேவையை நிறைவு செய்ய, சாலை போக்குவரத்துத் திறனை அதிகரிக்கும் பொருட்டு சாலைகளை அகலப்படுத்துதல், புறவழிச்சாலை

மற்றும் புதிய இணைப்புச் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் இன்றியமையாததாகும்.

- நீலாங்கரை, கிழக்குக் கடற்கரை சாலையில் பாலவாக்கம் மற்றும் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலையில் நெடுங்குன்றம் ஆகிய 3 இடங்களில் சாலைப் பணிகள் ரூ.72.54 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.
- தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலையில் புத்தூர் பகுதி சாலைப்பணிக்கு, நிலஎடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இச்சாலைப்பணி விரைவில் தொடங்கப்படும்.
- கொட்டிவாக்கம் கிராமத்தில் கிழக்கு கடற்கரைச் சாலையை ஆறுவழித்தடமாக அகலப்படுத்தும் பணிக்கு ரூ.17.16 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- மேற்சொன்ன 3 சாலைப்பணிகளில் மீதமுள்ள பகுதிகளுக்கு ரூ.995.50 கோடி மதிப்பில் நில எடுப்பு நடைபெற்று வருகிறது.

### 12.1.4 பாதசாரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள்: நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள்

முக்கிய சாலைப் பகுதிகளில் தடையில்லா போக்குவரத்தினை உறுதிசெய்யவும் பாதசாரிகள் பாதுகாப்பாக சாலையை கடக்கவும், நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

- தாம்பரம் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையத்தை இணைக்கும் வகையில் ,நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்கும் பணியில், இரயில்வே நிலையத்தை இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- திருமங்கலத்தில், கேந்திரிய வித்தியாலயா பள்ளி மற்றும் முகப்பேரில் DAV மற்றும் வேலம்மாள் பள்ளி ஆகிய 2 இடங்களின் அருகே நடைமேம்பாலங்கள் அமைக்க

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளை இணைக்கும் வகையில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்கு நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 12.1.5 விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ள பணிகள்

சென்னை பெருநகரின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைச் சீரமைப்பதற்காக 9 பணிகளுக்கு ரூ.1.96 கோடி மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 12.2 இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து இரயில்வே மேம்பாலம்/ கீழ்ப்பாலம் அமைத்தல்

**சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள்**

- பெருங்களத்தூரில் இரயில்வே மேம்பாலம் மற்றும் குரோம்பேட்டை ராதா நகரில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை ஆகிய பணிகள் ரூ.263.36 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.
- வேப்பம்பட்டில் கடவு எண்:14-ல் இரயில்வே மேம்பாலப்பணிக்கு, நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- திரிசூலத்தில் கடவு எண்:22, திருவொற்றியூரில் கடவு எண்:4 மற்றும் விம்கோ நகரில் கடவு எண்:6 ஆகிய மூன்று இரயில்வே கீழ்ப்பாலப் பணிகளில் இரயில்வே துறையின் பணிகள் முடிவடைந்தபின் நெடுஞ்சாலைப் பகுதி பணிகள் மேற்கொள்ளப்படும்.

- மீஞ்சூரில் கடவு எண்: 16-ல் இரயில்வே மேம்பாலப் பணிக்கு, நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஆவடியில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்தும் பணி, அம்பத்தூரில் டி.ஐ சைக்கிள் தொழிற்சாலை அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி ஆகியவை, இரயில்வே திட்டப் பணிகளில் சேர்க்க பரிந்துரைக்கப் பட்டுள்ளது. தற்போது, இப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**12.3 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.677.63 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.857.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தரமணி வேளச்சேரி மேம்பாலம் 01.11.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது

12A


# 13. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II

அதிக வாகன நெருக்கடி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த, தமிழக அரசு தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II-ஐ உருவாக்கியது. இவ்வலகானது, திட்ட இயக்குநர் தலைமையில் ஒரு தலைமைப் பொறியாளர், 2 வட்டங்கள் மற்றும் 8 கோட்டங்கள் மற்றும் 3 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

## 13.1 மேம்படுத்துதல் பணிகள்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-IIன் மூலம் 1170 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் உலக வங்கியின் கடனான 300.00 மில்லியன் அமெரிக்க டாலர் (மீளப்பட்ட தொகை ரூ.2122.90 கோடி)

உடன், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மறுகுடியமர்வு செலவு பணிகள் மொத்தம் ரூ.5171 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன.




### 13.1.1 முடிக்கப்பட்ட பணிகள்

427.967 கி.மீ. நீளமுள்ள 10 தொகுப்புப் பணிகள் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் ரூ.1704.91 கோடி மதிப்பீட்டில்

முடிக்கப்பட்டு 5 ஆண்டு கால பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொது தனியார் பங்களிப்பு முறையில் (பிபிபி) 70.2 கி.மீ. நீளமுள்ள ஒட்டன்சத்திரம் – தாராபுரம் - அவினாசிபாளையம் சாலை (மா.நெ.37) நான்கு வழிச் சாலையாக ரூ.713.45 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 8 ஆண்டு கால பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-I-இன் மூலம் மேம்பாடு செய்யப்பட்ட ஆற்காடு முதல் திருவாரூர் சாலை மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 581.493 கி.மீ நீளமுள்ள சாலைகள் வெளித்திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான ஒப்பந்தம் (OPRC) மூலம் ரூ.220.07 கோடியில் 5 ஆண்டு பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டன.

### 13.1.2 நடைபெற்று வரும் பணிகள்

பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் (EPC) 6 தொகுப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

நடைபெற்று வருகின்ற பணிகள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| தொ குப்பு எண் | சாலையின் பெயர் | நீளம் (கி.மீ.) | ஒப்பந்த தொ கை (கோடி) |
|---|---|---|---|
| EPC-11 | நான்கு வழிச் சாலை - ஓமலூர் - மேச்சேரி - மா.நெ. 222 கி.மீ. 1/150 முதல் கி.மீ. 14/300 வரை | 13.170 | 144.64 |
| EPC-12 | உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் – மல்லியக்கரை - ஆத்தூர் சாலை -மா.நெ. 30 கி.மீ. 81/125 முதல் கி.மீ. 91/200 வரை | 9.884 | 95.14 |

| | | | |
|---|---|---|---|
| EPC-13 | நான்கு வழிச் சாலை - சித்தோடு - ஈரோடு மா.நெ.15 கி.மீ. 153/500 முதல் கி.மீ. 161/625 வரை | 8.125 | 104.70 |
| EPC-14 | திருநெல்வேலி- செங்கோட்டை - கொல்லம் சாலையில் மா.நெ.39 கி.மீ. 5/000 முதல் கி.மீ. 27/700 வரை நான்கு வழிச் சாலையாக உறுதிப் படுத்துதல் மற்றும் அகலப் படுத்துதல் (தொகுப்பு எண் I) | 22.700 | 176.58 |
| EPC-15 | திருநெல்வேலி- செங்கோட்டை-கொல்லம் சாலையில் கி.மீ. 27/700 முதல் கி.மீ. 50/600 வரை நான்கு வழிச் சாலையாக உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் (தொகுப்பு எண் II) | 22.900 | 254.13 |
| EPC-16 | நான்கு வழிச் சாலை- மேட்டுப்பாளையம்-சத்தி- கோபி - ஈரோடு மா.நெ.15 கி.மீ. 123/0 முதல் 153/60 வரை | 30.600 | 272.53 |
| **மொத்தம்** | | **107.379** | **1047.72** |

## 13.2 தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) நிதி உதவியுடன் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 3319 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்காக ரூ.132.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, 987 கி.மீ. நீளமுள்ள 28 சாலைகள் 5 தொகுப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு ஆலோசகர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 13.3 நிறுவனத் திறன் மேம்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு (ICERS)

### 13.3.1 நிறுவனத் திறன் மேம்பாடு (ICE)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II இன் கீழ் ரூ.66.00 கோடி செலவில் நிறுவனத்

திறன் மேம்பாட்டுப் பணிகள் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கூறுகளின் கீழ் பின்வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன:

- நெடுஞ்சாலை கையேடுகள் (I, II, III& IV) ஆகியவற்றை தற்போதைய நிலைக்கேற்ப திருத்தம் செய்தல்.
- இத்துறைக்குத் தேவையான கணினிகள், மடிக்கணினிகள் போன்றவற்றை தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (Electronics Corporation of Tamil Nadu (ELCOT)) மூலம் கொள்முதல் செய்தல்.
- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (HRS) மூலம் பயிற்சி மையத்திற்கான கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல்.

### 13.3.2 சாலை பாதுகாப்பு (RS)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II இன் கீழ் ரூ.120.00 கோடி செலவில் சாலை பாதுகாப்புப் பணிகள் உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### 13.4 நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நடவடிக்கைகள்

நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம் 2013 (RFCTLARR Act - Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act-2013) மற்றும் உலக வங்கியின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அடிப்படையில் திட்டங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு, உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கிட ஏதுவாக, மறு குடியமர்வு கொள்கை அமைப்பிற்கு (RPF –

Resettlement Policy Frame work) அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் – 2001ன்படி இத்திட்டத்திற்கென 177.19 ஹெக்டர் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு நிலங்களுக்கான இழப்பீடு "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம் 2013" அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

மறு குடியமர்வு கொள்கை அமைப்பின்படி, இத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள், நில உரிமை இல்லாதவர்கள், சாலையோர கடை நடத்துபவர்கள் உட்பட 5272 நபர்களுக்கு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்கெனவும், திட்டத்தால் பாதிக்கப்பட்ட 298 பொதுவான சொத்துகளை மறுகட்டுமானம்

செய்யவும் 31.03.2022 வரை மொத்தம் ரூ.53.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**13.5 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.653.33 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.626.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 14. சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்

## 14.1 திட்ட உருவாக்கம்

புதிய தொழில் தடங்களை உருவாக்குவது என்பது தொழிற்சாலைகளின் வளர்ச்சியை ஏதுவாக்கி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திடும் முக்கியமான உட்கட்டமைப்பு திட்டமாகும். சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டமானது, திட்ட இயக்குநர் தலைமையில் தலைமைப் பொறியாளர், 2 வட்டங்கள், 6 கோட்டங்கள் மற்றும் 5 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்டமானது 589 கி.மீ. நீளமுள்ள 16 மாநில நெடுஞ்சாலை வழித்தடங்களை, தற்போது ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் தமிழ்நாடு

தொழிற்பகுதி இணைப்புத் திட்டத்தின் கீழ் மேம்படுத்திட எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து திட்டப் பணிகளும் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 72.43 கி.மீ. சாலைகள் இருவழித் தடத்திலிருந்து நான்குவழித் தடமாகவும், மீதமுள்ள 516.57 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இருவழித் தடத்திலிருந்து கடின புருவங்களுடன் கூடிய இருவழித் தடமாகவும் மேம்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ், 22 புறவழிச்சாலைகள் (109 கி.மீ.), 13 உயர்மட்ட பாலங்கள், 9 இரயில்வே மேம்பாலங்கள், ஒரு இரயில்வே கீழ்பாலம், ஒரு சாலை மேம்பாலம், ஒரு உயர்மட்ட சாலை, ஒரு வரையறுக்கப்பட்ட பயன்பாட்டு சுரங்கப்பாதை,

ஒரு பாதசாரிகள் சுரங்கப்பாதை, 2 வாகன சுரங்கப் பாதைகள், 120 சிறு பாலங்கள், 1285 குறு பாலங்கள் மற்றும் 371319 மீட்டர் நீளத்திற்கு கான்கிரீட் வடிகால் வசதி அமைக்கப்படவுள்ளன. மேலும், 92 முக்கிய சந்திப்புகள் மற்றும் 921 இதர சந்திப்புகள் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

| வ. எண் | EPC எண் | திட்டச் சாலை | மொத்த நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | EPC-01 | செய்யூர் (கிழக்கு கடற்கரைச் சாலை) - போளூர் சாலை (மா நெ 115) கிழக்கு கடற்கரை இணைப்பு சாலையுடன் | 109.273 |
| 2 | EPC-02 | காஞ்சிபுரம் - அரக்கோணம் - திருத்தணி சாலை (மா.நெ 58-2) | 41.779 |

| வ. எண் | EPC எண் | திட்டச் சாலை | மொத்த நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|
| 3 | EPC-03 | செங்கல்பட்டு முதல் காஞ்சிபுரம் சாலை (மா.நெ 58-1) மிலிட்டரி சாலை உட்பட | 39.786 |
| 4 | EPC-04 | திருச்செந்தூர் முதல் அம்பாசமுத்திரம் வழி பாளையங் கோட்டை (மா.நெ 40-1) | 50.590 |
| 5 | EPC-05 | மேலூர் - திருப்பத்தூர் சாலை (மா.நெ 191 ) | 30.485 |
| 6 | EPC-06 | தஞ்சாவூர் முதல் மன்னார்குடி வரை (மா.நெ 63) | 29.435 |
| 7 | EPC-07 | கும்பகோணம் முதல் மன்னார்குடி வரை (மா.நெ 66) | 14.900 |

| வ. எண் | EPC எண் | திட்டச் சாலை | மொத்த நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|
| 8 | EPC-08 | கும்பகோணம் முதல் சீர்காழி வரை (மா.நெ 64) | 36.779 |
| 9 | EPC-09 | மயிலாடுதுறை முதல் திருவாரூர் வரை (மா.நெ 23) | 29.882 |
| 10 | EPC-10 | துறையூர் முதல் பெரம்பலூர் வரை (மா.நெ 142) | 30.057 |
| 11 | EPC-11 | விருத்தாசலம் முதல் உளுந்தூர்பேட்டை வரை (மா.நெ 69) | 22.855 |
| 12 | EPC-12 | கடலூர் முதல் மடப்பட்டு சந்திப்பு (மா.நெ 9) | 37.360 |
| 13 | EPC-13 | மோகனூர்- நாமக்கல்- சேந்தமங்கலம் - ராசிபுரம் சாலை (மா.நெ 95) | 31.500 |

| வ. எண் | EPC எண் | திட்டச் சாலை | மொத்த நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|
| 14 | EPC-14 | திருச்செங்கோடு முதல் ஈரோடு வரை (மா.நெ 79) | 11.153 |
| 15 | EPC-15 | ஓமலூர் முதல் திருச்செங்கோடு வரை (வழி) சங்ககிரி, திருச்செங்கோடு புறவழிச்சாலை உட்பட (மா.நெ 86) | 51.715 |
| 16 | EPC-16 | பாளையங்கோட்டை முதல் அம்பாசமுத்திரம் வரை (மா.நெ 40-2) | 21.400 |
| | | மொத்தம் | 588.949 |

## 14.2 திட்ட மதிப்பு

இத்திட்டத்தின், நில எடுப்பு தொகை உட்பட மொத்த மதிப்பு ரூ.6448 கோடி ஆகும். நில எடுப்பு செலவான ரூ.1574 கோடி மாநில அரசால்

ஏற்கப்படும். மொத்த கட்டுமான செலவான ரூ.4874 கோடியில், ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.3554 கோடி கடனுதவியாக அளிக்கின்றது, மீதமுள்ள ரூ.1320 கோடி மாநில அரசால் ஏற்கப்படும். ஆசிய வளர்ச்சி வங்கியுடனான கடன் ஒப்பந்தம் ஜூன் 16, 2021ல் கையெழுத்திடப்பட்டது.

## 14.3 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

சாலைப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், முன்னெச்சரிக்கை பதாகைகள், விளக்குகள் மற்றும் இதர சாலை உபகரணங்கள் அமைக்கப்படவுள்ளன. முக்கிய சந்திப்புகள், விபத்துப் பகுதிகள், பள்ளி மற்றும் மருத்துவமனை அருகில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்படும். பயணியரின் வசதிக்காக, பேருந்து நிறுத்தங்களில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

### 14.4 நில எடுப்புப் பணிகள்

இத்திட்டத்திற்காக 348 கிராமங்களில் இருந்து மொத்தம் 438 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இதுவரை, 422 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. மீதம் கையகப்படுத்த வேண்டிய பரப்பு, தீர்வம் விசாரணை மற்றும் இறுதி தீர்வம் நிலையில் உள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் சமூகப் பாதுகாப்பு கொள்கையின்படி, இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் இரயில் நிலையம் அருகில் மேல்பாக்கம் கிராமத்தில் நில எடுப்பில் பாதிக்கப்பட்ட 41 பழங்குடியினர் (இருளர்) குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 41 குடும்பங்களை மறுகுடியமர்வு செய்வதற்காக, குடியிருப்புகள், அங்கன்வாடி கட்டடம் சமுதாயக்கூடம்,

வழிபாட்டுதலம் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி, நீரேற்ற அறை மற்றும் சிமெண்ட் சாலை வசதியுடன் குடிநீர் விநியோக வசதி உட்பட அனைத்து வசதிகளும் அமைக்கப்படவுள்ளன.

**14.5 கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம்**

மொத்தமுள்ள 16 சாலை மேம்பாட்டுப் பணிகளில் 557.22 கி.மீ. நீளமுள்ள 15 சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள ஒரு பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

**14.6 ஆலோசகர் சேவைப் பணிகள்**

இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்த, ஆசிய வளர்ச்சி வங்கி விதிமுறைகளின்படி 5 கட்டுமானப் பணி மேற்பார்வை ஆலோசகர்களில், நான்கு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வருகின்றனர்.

மேலும் ஒரு ஆலோசகர் நியமனத்துக்கு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

**14.7 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.1080 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.1300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 15. சென்னை எல்லைச் சாலை திட்டம்

சென்னை எல்லைச் சாலை திட்டமானது, திட்ட இயக்குநர், தலைமையில் செயல்படுகிறது. திட்ட செயலாக்க அலகு 1 கண்காணிப்புப் பொறியாளர், 1 கோட்டப் பொறியாளர் மற்றும் 1 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலருடன் செயல்பட்டு வருகின்றது.

132.87 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலை திட்டம் எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி கிழக்கு கடற்கரை சாலையில் மாமல்லபுரம் அருகே பூஞ்சேரி சந்திப்பில் முடிவடைகிறது. இத்திட்டமானது, சென்னை நகருக்கு சிறந்த போக்குவரத்து இணைப்பை வழங்கும் ஒரு முக்கிய போக்குவரத்து வழித்தடமாகும். மேலும், இத்திட்டம்

சென்னையின் நான்கு முக்கிய ஆரச் (ரேடியல்) சாலைகளான தே.நெ-16 (சென்னை - கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை), தே.நெ-716 (சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலை), தே.நெ-48 (சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை), தே.நெ-32 (சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை) ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைப்பதன் மூலம் துறைமுகங்களுக்குத் திறமையான வணிகப் போக்குவரத்தை வழங்குகிறது.

இத்திட்டம் பிரிவு I முதல் பிரிவு IV வரை அணுகல்-கட்டுப்படுத்தப்பட்ட ஆறுவழித்தட பிரதான சாலையாகவும், பிரிவு-V அணுகல்-கட்டுப்படுத்தப்பட்ட நான்கு வழித்தட பிரதான சாலையாகவும், இருபுறமும் முழு நீளத்திற்கு இருவழித்தடச் சேவைச் சாலையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. செயல்திறன் மற்றும்

பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக நுட்பமான போக்குவரத்து அமைப்பு (ITS) நிறுவப்படும்.

132.87 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலை திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்காக 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | தொடக்கம் | முடிவு | நீளம் (கி.மீ.) | திட்ட மதிப்பீடு ரூ. (கோடி) |
|---|---|---|---|---|
| I | எண்ணூர் துறைமுகம் | சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை 16ல் உள்ள தச்சூர் | 25.40 | 3624.42 |
| II | சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை 16ல் உள்ள தச்சூர் | சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலை 716 ல் உள்ள திருவள்ளூர் புறவழிச் சாலையின் தொடக்கம் | 26.10 | 6754.40 (பிரிவு II மற்றும் III மட்டும்) |

| | | | | |
|---|---|---|---|---|
| III | சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலை 716 ல் உள்ள திருவள்ளூர் புறவழிச் சாலையின் தொடக்கம் | சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை 48ல் உள்ள திருப்பெரும்புதூர் | 30.10 | |
| IV | சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை 48ல் உள்ள திருப்பெரும் புதூர் | சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை 32 ல் உள்ள சிங்கபெருமாள் கோயில் | 23.80 | 584.00 (மேம்படுத் துதல் மட்டும்) |
| V | சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை 32 ல் உள்ள சிங்கபெரு மாள் கோயில் | கிழக்கு கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள பூஞ்சேரி சந்திப்பு | 27.47 | 2850.00 |
| **மொத்தம்** | | | **132.87** | **13812.82** |

இத்திட்டத்தின் பிரிவு I-ன் செயலாக்கமானது ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதி நிறுவனத்தின் (JICA) 40,074 மில்லியன் ஜப்பான் யென் (ரூ.2473.70 கோடி) நிதி உதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. பிரிவு I-ன் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பிரிவு II மற்றும் III ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் பன்னாட்டு மேம்பாட்டிற்கான எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் நிதி நிறுவனம் (OPEC Fund for International Development) ஆகிய வங்கிகளின் 478.07 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.3346.49 கோடி) நிதி உதவியுடன் தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC) மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. வெளி

நிதியுதவிக்கான கடன் ஒப்பந்தம் 2022-23 நிதியாண்டின் முதல் காலாண்டில் கையெழுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு II மற்றும் III-ற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.4899 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பிரிவு-II, 2 இபிசி (இபிசி-01 & 02) தொகுப்புகளாகவும், பிரிவு-III, 3 (இபிசி-03, 04 & 05) தொகுப்புகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

பிரிவு II, இபிசி-01 தொகுப்பிற்கான கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பிரிவு II, இபிசி-02 தொகுப்பிற்கான கட்டுமான பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நிதி மதிப்பீடு முடிவுற்று, பணி ஆணை வழங்கும் எண்ணம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு-III, இபிசி-03 & 04 தொகுப்புகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடு நடந்து வருகிறது. பிரிவு-III, இபிசி-05 தொகுப்புக்கான ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களுக்கு AIIB நிதி நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பிரிவு-IV மாநில நிதியைப் பயன்படுத்தி தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தால் முடிக்கப்பட்டது. ரூ.584 கோடி செலவில் பிரிவு IV ஐ சென்னை எல்லைச் சாலை தரத்திற்கு உயர்த்துவதற்கான தொகையையும் பிரிவு II மற்றும் III க்காக AIIB யிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு-V ல் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. பிரிவு V ஐ

செயல்படுத்துவதற்காக நிதி நிறுவனம் தெரிவு செய்யும் நடவடிக்கையில் உள்ளது.

**2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.1597.81 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.2498.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 16. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் வளர்ச்சிக்காக 1948 ஆம் ஆண்டு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மண் ஆய்வகமாக நிறுவப்பட்டது. 1957 இல் இது நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமாக மீண்டும் நிறுவப்பட்டது.

பழமையான ஆராய்ச்சி நிறுவனங்களில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஒரு முன்னோடி ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். கிண்டியில் சுமார் 40000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட இந்த நிறுவனம் அனைத்து உபகரணங்களும் அமையப்பெற்ற ஆய்வகங்கள் மற்றும் நூலகத்தைக் கொண்டுள்ளது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்திற்குள், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்

துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி வகுப்புகளை வழங்குவதற்காக, முழு வசதியுடன் கூடிய பயிற்சி மையம் அமைந்துள்ளது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயக்குநரின் தலைமையில் 2 இணை இயக்குநர்கள், 1 கண்காணிப்புப் பொறியாளர், 6 துணை இயக்குநர்கள் மற்றும் 17 கோட்டப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை நோக்கங்கள் பின்வருமாறு:

- புதிய கட்டுமானப் பொருள்கள் மற்றும் தொழில் நுட்பங்களின் மீதான ஆராய்ச்சிகளை மேற்கொள்வது.
- சாலை மற்றும் பாலப்பணிகளில் பயன்படுத்தப்படும் பொருள்களின் மீதான பரிசோதனைகளை மேற்கொள்வது.

- சாலைப் பணிகளின் போது அறியப்படும் தொழில்நுட்பப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது.
- நெடுஞ்சாலைத் துறையினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தினை பல கட்டங்களில் உறுதி செய்தல்.
- நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றும் பொறியாளர்களுக்குப் பயிற்சிகளின் மூலம் திறன் மேம்பாடு செய்தல்.
- பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்வதற்கு சாலை பாதுகாப்பு முறைகளைச் செயல்படுத்த களப் பொறியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

- சாலை வடிவமைப்பு மற்றும் சாலைச் சந்திப்பை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் தேவைக்கேற்ப முடிவுகளை எடுக்கவும் அமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு ஆளுமை குழு (Governing Committee) அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் செயல்பாடுகள் பின்வருமாறு:

- ஆராய்ச்சி திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்குதல்.

- தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் சாலை கட்டமைப்பில், ஆராய்ச்சி திட்டங்களின் முடிவுகளை களத்தில் சோதனை செய்வதற்கான அனுமதி மற்றும் முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்தல்.

- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பயிற்சி மையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணி கூறுகளை வெளித்திறன் அடிப்படையில் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தல்.

- பயிற்சி மையங்களில் நடத்தப்படும் பல்வேறு பயிற்சித் திட்டங்களின் பயிற்சியாளர்களுக்கான மதிப்பூதிய விகிதத்தை அங்கீகரித்தல் மற்றும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பயிற்சி மையத்தின் பணியாளர்களுக்கு

செயல்திறனில் சிறந்து விளங்குவதற்கான ஊக்கத்தொகை வழங்குதல்.

- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் பொறியாளர்களை எவ்வித வரம்பும் இன்றி இந்தியா மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் நெடுஞ்சாலைகள் தொடர்பான கருத்தரங்குகள் / மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அனுப்புதல்.

## 16.1 ஆராய்ச்சி பணிகள்

தமிழ்நாடு அரசின் மாநில புத்தாக்க முன்முயற்சி நிதியின் (TANII) கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பணிகள் பின்வருமாறு:

- விபத்திற்குள்ளாகும் சாலை பயனாளர் குறித்து விபத்து பற்றிய ஆய்வு,

- உறுதி செய்யப்பட்ட துணைத் தளத்தின் (Sub Base) மீது அமைக்கப்பட்ட தார்ச்சாலையின் தன்மை குறித்த ஆய்வு,
- சாலை அடித்தளத்தின் தாங்குதிறனை பாறை துகள்களைச் சேர்த்து அதிகரிப்பது குறித்து அறிதல்,
- நெடுஞ்சாலைத்துறையில் பாலத்தின் செயல்திறனைக் கருவிகள் மூலம் கண்காணித்தல்,
- வட்டச் சோதனைத்தடம் மூலம் நீண்ட காலம் தாங்கக் கூடிய சாலை கட்டுமானத்திற்கான தொழில்நுட்பம் குறித்த ஆய்வு,
- நிலக்கீல் கலவையில் நுண்ணிய களி மண்ணின் தாக்கம் குறித்த ஆய்வு,

- சணல் இழை வலுவூட்டப்பட்ட குளிர் நிலக்கீல் கலவைகளின் செயல்திறன் குறித்த ஆய்வு,
- கற்கலவை சாலைகளில் நீராற்றும் கலவைகளின் செயல்திறன் குறித்த ஆய்வு.

### 16.2 ஆய்வகங்கள்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் சென்னையில் நிலக்கீல், மண், கற்கலவை மற்றும் போக்குவரத்து ஆகிய நான்கு ஆய்வகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

மண்டல அளவில் சாலை மற்றும் பாலங்களுக்கான கட்டுமானப் பொருள்களைப் பரிசோதனை செய்ய விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூரில் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உலகத்தரம் வாய்ந்த்ததாக மேம்பாடு செய்யப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்தின் மூலம் ரூ.3.95 கோடி மதிப்பிலான புதிய விஞ்ஞான உபகரணங்களைக் கொள்முதல் செய்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 16.3 தரக்கட்டுப்பாடு

பாதுகாப்பான மற்றும் வேகமான பயணத்தை உறுதி செய்வதற்கு தரக்கட்டுப்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. சிறந்த தரக்கட்டுப்பாட்டுக்காக 9 தரக்கட்டுப்பாட்டு பிரிவுகள் ஆய்வக வசதிகளுடன் செயல்பட்டு இந்திய சாலைக் குழும குறியீடு விதிகளின்படி பணியின் தரத்தை உறுதிப்படுத்துகின்றன. இத்துறையின் பல்வேறு செயலாக்க அலகுகளால் மேற்கொள்ளப்படும்

பணிகளின் தரம் தரக்கட்டுப்பாட்டு பிரிவால் கண்காணிக்கப்படுகிறது.

## 16.4 பயிற்சி மையம்

பிரத்யேகமாக நவீன வசதிகள் மற்றும் ஒரு விடுதியுடன் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது.

துறையின் பொறியாளர்கள் மற்றும் பிற அலுவலர்களின் அறிவுத்திறனை மேம்படுத்துதல் மற்றும் சிறப்பான செயலாக்கத்திற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### 16.4.1 பயிற்சி

- தமிழகத்தில் விபத்துகளைக் குறைக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ”விபத்தில்லா தமிழகம்” உருவாக்க துறையின் அனைத்துப் பொறியாளர்களும் பயன்பெறும் வகையில்

’சாலை பாதுகாப்பு பொறியியல்’ குறித்த சிறப்புத் தொடர் பயிற்சித் திட்டம் 15.12.2021 அன்று தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக 400 பொறியாளர்களுக்குப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- நெடுஞ்சாலை பொறியியலில் முக்கிய பிரிவுகளான சாலைகளையும் பாலங்களையும் வடிவமைத்தல் மற்றும் கட்டுதல், தரக்கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.
- பிற துறை அலுவலர்களுக்கு வெவ்வேறு பொருள் குறித்து பயிற்சி அளித்தல்.

**2021-22 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சிகள்**

2021-22 ஆம் ஆண்டில் 11 பயிற்சி வகுப்புகள் 433 பொறியாளர்களுக்கும், 58 நெடுஞ்சாலைத்

துறை அலுவலர்களுக்கும் நடத்தப்பட்டது. இதில், 3 இணைய வழிப் பயிற்சிகளும் உள்ளடங்கும்.

### 16.4.2 விரிவான பயிற்சித் திட்டம்

பயிற்சியின் தேவை குறித்த மதிப்பீட்டின் மீதான ஆய்வின் அடிப்படையில் பயிற்சி நாள்காட்டியின்படி ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஐந்து வகை சேவைகளின் கீழ் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய விரிவான பயிற்சி திட்டத்தை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

விரிவான பயிற்சித் திட்டத்தை நடத்துவதற்கான தனி அரசாணை 18.3.2022 அன்று வெளியிடப்பட்டது.

விரிவான பயிற்சித் திட்டத்தின்படி, 27 பயிற்சி திட்ட தொகுதிகள் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும், 2640 எண்ணிக்கையிலான பயிற்சி பெறுபவர்களுக்கான 66 பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டிலிருந்து இவை நடைமுறைப் படுத்தப்படும்.

## 16.5 சாலை பாதுகாப்பு அலகு

சாலை பாதுகாப்பு அலகானது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு மற்றும் தேசிய நெடுஞ்சாலை அலகிற்கான சாலை பாதுகாப்பு அம்சம் குறித்த பரிந்துரைகளை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுச் செயல்படுகிறது.

### 16.5.1 சாலை பாதுகாப்பு அலகின் நோக்கம் மற்றும் குறிக்கோள்

- iRAD மற்றும் பிற இணை ஆதாரங்களில் இருந்து சாலைப் போக்குவரத்தின் விபத்து தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
- சாலை பாதுகாப்பு தொடர்பானவற்றில் பல்வேறு பங்களிப்புத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்.
- சாலை சந்திப்பு மேம்பாட்டிற்கான பிரேரணைகள் மற்றும் பிற சாலை பாதுகாப்பு பணிகள் மீது ஆலோசனைகள் வழங்குதல்.
- கள ஆய்வுகளை மேற்கொண்டு தகுந்த பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் பணி முன்னேற்றத்தின் போதும் உரிய ஆய்வு செய்து தீர்வுகளைப் பரிந்துரைத்தல்.

### 16.5.2 சாலை பாதுகாப்பு அலகின் செயல்பாடுகள்

- சாலை பாதுகாப்பு அலகின் மூலம் 2021-22 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.200.00 கோடி மதிப்பில் எடுக்கப்பட்ட 401 பணிகளுக்கும் மற்றும் சாலை பாதுகாப்புக் கூறின் கீழ் ரூ.100.00 கோடி மதிப்பில் எடுக்கப்பட்ட 99 சாலை பாதுகாப்பு பணிகளுக்கும் வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு தேவையான ஆய்வுகள் செய்யப்பட்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளன.

### 16.6 தேசிய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு

- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், இந்திய சாலைகள் குழுமத்தினுடைய "புதிய பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை

அங்கீகரிக்கும் குழு” மற்றும் “மனிதவள மேம்பாட்டுக் குழு” ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளது.

- ஒவ்வொரு ஆண்டும் இந்திய சாலைகள் குழுமத்தால் நடத்தப்படும் ஆண்டு அமர்வுகளில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பொறியாளர்கள் பங்குபெற்று தங்களின் தொழில்நுட்ப விளக்க உரைகளை வழங்கி வருகின்றனர்.

## 16.7 வருவாய்

2021-22 ஆம் நிதி ஆண்டில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் அனைத்து ஆய்வகங்களின் மூலம் 22,226 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.18.39 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் – குடவாசல் – கும்பகோணம் சாலையில் சாலைப் பணிகளை ஆய்வு செய்தல்

16A





மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் "சாலை பாதுகாப்புப் பொறியியல்" சிறப்பு பயிற்சி துவக்கி வைக்கப்பட்டு, பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

16B

# 17. திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் திட்டம் மற்றும் வடிவமைப்பு அலகானது, நெடுஞ்சாலைக் கட்டமைப்புகளின் வடிவமைப்புப் பணிகளுக்காக தனியாக ஏற்படுத்தப்பட்டு நான்கு வடிவமைப்புக் கோட்டங்கள் மற்றும் ஒரு இணை தலைமைப் பொறியாளருடன், தலைமைப் பொறியாளரின் கீழ் சென்னையில் செயல்படுகிறது.

## 17.1 அலகின் செயல்பாடுகள்

- ஆற்றுப் பாலம், இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம், சாலை சந்திப்புகளில் சாலை மேம்பாலம் மற்றும் நெடுஞ்சாலையின் இதர கட்டமைப்புகளுக்கான வடிவமைப்புகள்,

வரைபடங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றை தயாரித்தல்.

- துறையின் பல்வேறு அலகுகளிலிருந்து ஆலோசகர்கள் மூலம் தயாரிக்கப்படும் விரிவான திட்ட அறிக்கைகளை சரிபார்த்து ஒப்புதல் வழங்குதல்.
- பணிகள் செயல்படுத்தப்படும் நிலையில் மண்ணின் தன்மை மற்றும் தள வேறுபாடுகளுக்கு ஏற்ப தேவை ஏற்படின் பாலங்களின் வடிவமைப்புக் கூறுகளை மறு வடிவமைப்பு செய்தல்.
- மிகப் பெரிய கனரக சுமையுந்துகள் சாலை மற்றும் பாலங்களில் செல்வதற்காக கூர்ந்தாய்வு செய்து தக்க பரிந்துரை வழங்குதல்.

- மற்ற துறைகளிடமிருந்து பெறப்படும் பாலங்களின் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்புகளை ஆய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.

**17.2 2021-22 ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிகள்**

2021-22ல், 90 பாலங்களின் வடிவமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள 44 பாலங்களின் வடிவமைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

# 18. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மற்றும் TIDEL இணைந்து 50 : 50 சம பங்கு விகிதத்தில் கூட்டு நிறுவனமாக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் இயங்கி வருகின்றது.

தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் (ITEL), தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

## 18.1 செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்

இந்நிறுவனம் சலுகை ஒப்பந்ததாரர், திட்ட மேலாண்மை முகவர் மற்றும் சுங்க வசூல் பணிகள் என்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் இராஜீவ் காந்தி சாலையை மேம்பாடு

செய்தும், பராமரித்தும் சுங்கச் சாலையாக நிர்வகித்து வருகிறது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் கிழக்கு கடற்கரை சாலையின் அக்கரை முதல் புதுச்சேரி வரையிலான பகுதியினை நிர்வகித்துச் சுங்கச்சாலையாகப் பராமரித்து வருகிறது.

மேலும் இந்நிறுவனம் பின்வரும் திட்டப் பணிகளை மேம்பாடு செய்து மேலாண்மை செய்து வருகின்றது.

**18.1.1 சென்னை வெளிவட்டச் சாலை**

தே.நெ.32ல் வண்டலூர் முதல் திருவெற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையான 60.15 கி.மீ. நீளமுள்ள பசுமை வழிச்சாலைப் பணி இரு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

முதல் கட்டமாக வண்டலூர் (தே.நெ.32) மற்றும் நெமிலிச்சேரிக்கு இடையிலான 29.65 கி.மீ. நீளச் சாலை ரூ.1081.40 கோடி மதிப்பில் வடிவமைத்தல், கட்டுமானம், நிதியளித்தல், இயக்குதல், பராமரித்தல் அடிப்படையில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இரண்டாம் கட்டமாக நெமிலிச்சேரி (தே.நெ.716) முதல் திருவொற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையான 30.50 கி.மீ. நீளச் சாலை ரூ.1075.00 கோடி மதிப்பில் வடிவமைத்தல், கட்டுமானம், நிதியளித்தல், இயக்குதல், பராமரித்தல் அடிப்படையில் பிரதான சாலை முடிக்கப்பட்டுள்ளது.

19.01.2022 முதல் இச்சாலையில் உபயோகிப்பாளர் கட்டண வசூல் தொடங்கப்பட்டது.

### 18.1.2 இராஜீவ் காந்தி சாலையில் இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் “U" வடிவ மேம்பாலம்

போக்குவரத்து மேலாண்மைத் திட்டப் பணியாக ரூ.108.13 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் “U" வடிவ மேம்பாலம், இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரைச் சாலையை இணைக்கும் திருவான்மியூர் கிளை சாலை சந்திப்பில் ஒரு நடைமேம்பாலம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் மீது ஒரு பாலம் ஆகிய கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 18.1.3 சென்னை எல்லைச் சாலை பிரிவு-1

சென்னை எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரையிலான 21.7 கி.மீ. சென்னை எல்லைச் சாலை பிரிவு-I தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு

முகமை (JICA) நிதியுதவியுடன் பசுமை வழிச்சாலையாகச் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும் சென்னை வெளிவட்டச் சாலையுடன் இணைக்கும் 3.68 கி.மீ. நீளமுள்ள சாலைத் திட்டமும் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

சாலை கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

### 18.1.4 கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலை அமைத்தல்

பழைய மாமல்லபுரம் சாலையில், கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலைகள் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருப்போரூர் புறவழிச்சாலை (7.45 கி.மீ.) மற்றும் கேளம்பாக்கம் புறவழிச்சாலை (4.675 கி.மீ.) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**18.2 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

2021-22 ஆம் ஆண்டில் ரூ.499.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.417.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 19. தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகமானது லாப நோக்கமின்றி செயல்பட்டு வரும் முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஆகும். இக்கழகம் மாநில அரசு மற்றும் பன்னாட்டு நிதியுதவி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## 19.1 தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

### 19.1.1 ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம்

வண்டலூர் - வாலாஜாபாத் சாலை கி.மீ. 30/4 - 63/8 மற்றும் சிங்கபெருமாள் கோயில் - திருப்பெரும்புதூர் சாலை கி.மீ. 0/6 - 24/6 ஆகிய

இரு சாலைகளை 6 வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி 5 கட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில், முதல் கட்டம் முதல் நான்காம் கட்டம் வரையிலான பணிகள் முடிக்கப்பட்டு ஐந்தாம் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

படப்பை புறவழிச்சாலைக்கு பதிலாக வண்டலூர் வாலாஜாபாத் சாலையில் கி.மீ. 37/6 - 38/4 ல் மேம்பாலம் கட்டும் பணி ரூ.26.65 கோடி மதிப்பீட்டில் 15.12.2021 துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

### 19.1.2 சென்னை எல்லைச் சாலை திட்டம்

இந்நிறுவனம் மூலம் சென்னை எல்லைச் சாலை திட்டம் பிரிவு 2, 3, 4 & 5 செயல்படுத்தப்படுகிறது.

பிரிவு -2: தேசிய நெடுஞ்சாலை -16ல் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை ஆரம்பம் வரை 26.10 கி.மீ.

பிரிவு-3: திருவள்ளூர் புறவழிச்சாலை ஆரம்பம் முதல் தேசிய நெடுஞ்சாலை -48ல் திருப்பெரும்புதூர் வரை 30.10 கி.மீ.

பிரிவு-4: ஏற்கனவே அகலப்படுத்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலை -48ல் திருப்பெரும்புதூர் முதல் தேசிய நெடுஞ்சாலை -32 ல் சிங்கபெருமாள் கோயில் வரை 23.80 கி.மீ. நீளச் சாலை. சென்னை எல்லைச் சாலை திட்டம் நுழைவு கட்டுப்பாட்டுச் சாலையாக அமைக்கப்பட உள்ளதால், இந்த பிரிவில் வாகன சுரங்கப்பாதைகள் மற்றும் இச்சாலையை உறுதிப்படுத்துதல் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது.

பிரிவு-5: தேசிய நெடுஞ்சாலை - 32 இல் சிங்கபெருமாள் கோயில் முதல் மாமல்லபுரம் வரை 27.47 கி.மீ.

### 19.1.3 கடவுபாதை (LC) எண்.47க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி

கூடுவாஞ்சேரி மற்றும் சிங்கபெருமாள் கோயில் இரயில்வே நிலையங்களுக்கு இடையில் கடவு பாதை எண்.47 (LC 47)க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி ரூ.90.75 கோடி மதிப்பீட்டில் 15.12.2021 தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 19.2 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் மற்றும் 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2021-22 ஆம் ஆண்டில் ரூ.37.81 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.43.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 20. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு கடல்சார் வாரியமானது தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/1996) இன் படி, 18.03.1997 முதல் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி மற்றும் முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு:

1. ஏற்றுமதி, இறக்குமதித் துறையில் தமிழ்நாடு மாநிலத்தின் பங்கை அதிகரித்தல்.

2. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பெருந்துறைமுகங்களின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.

3. சீரிய வசதிகள், சேவை அளிப்பதன் மூலம் தென்மாநிலங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்தல்.

4. போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

5. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் தேவையான துறைமுக வசதிகளை ஏற்படுத்துவதற்கு வகை செய்தல்.

6. தனித்துவமான துறைமுக வசதிகளை அளிப்பதன் மூலம் துறைமுகங்களை அடிப்படையாகக் கொண்ட அனல்மின் நிலையங்களை அமைப்பதற்கு ஊக்கப்படுத்துதல்.

7. மாநிலத்தில் மேம்படுத்தப்பட்ட துறைமுக உள்கட்டமைப்பு வசதிகளை முழுமையாக பயன்படுத்தும் அளவிற்கு வசதிகள் செய்தல்.

### 20.1 கடற்கரை மற்றும் துறைமுகங்கள்

தமிழ்நாடு மாநிலம், 1076 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தியாவின் இரண்டாவது மிக நீண்ட கடற்கரை பகுதியைக் கொண்டது. இந்த கடற்கரையில், கீழ்க்கண்ட மூன்று பெருந்துறைமுகங்கள் உள்ளன.

1. சென்னை துறைமுகம்
2. காமராஜர் துறைமுகம் (எண்ணூர்)
3. வ.உ. சிதம்பரனார் துறைமுகம் (தூத்துக்குடி).

### 20.2 தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்கள்

தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட சிறு துறைமுகங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:

| மாநில அரசுத் துறைமுகங்கள் | தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் |
|---|---|
| 1. கடலூர்<br>2. நாகப்பட்டினம்<br>3. பாம்பன்<br>4. இராமேஸ்வரம்<br>5. கன்னியாகுமரி<br>6. குளச்சல் | 1. காட்டுப்பள்ளி<br>2. எண்ணூர் சிறுதுறைமுகம்<br>3. பனையூர்<br>4. திருச்சோபுரம்<br>5. சிலம்பிமங்கலம்<br>6. பரங்கிப்பேட்டை<br>7. பி.ஒய் 03எண்ணெய் வளப்பகுதி<br>8. திருக்கடையூர்<br>9. திருக்குவளை<br>10. உடன்குடி<br>11. கூடங்குளம். |

பெருந்துறைமுகங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலும், சிறு துறைமுகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

## 20.3 சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான கொள்கை

தமிழ்நாட்டின் கடலோரத்தில் அமைந்துள்ள சிறுதுறைமுகங்கள் அனைத்தும் தமிழக அரசின் சிறுதுறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இக்கொள்கையானது தனியார் பங்கேற்பு, நெகிழ்வான அணுகுமுறை, நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனப் பின்னணி ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஒரு தன்னாட்சி அமைப்பாக போதிய முழுசுதந்திரத்துடன் செயல்படுவதுடன், இம்மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்களின் துரிதமான வளர்ச்சிக்காக இயல்பான அணுகுமுறையுடன் செயல்படுவதுடன் வணிக விவேகத்துடனும், பொறுப்புடனும் செயல்படுகிறது.

## 20.4 செயல்பாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் இயக்கம்

### 20.4.1 அரசுத் துறைமுகங்கள்

<u>கடலூர் துறைமுகம்:</u> நங்கூரத் துறைமுகமான இத்துறைமுகம், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சொந்த நிதி மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் (சாகர்மாலா திட்டம்) சிறு மற்றும் நடுத்தரக் கப்பல்களை நேரடியாகக் கையாளக்கூடிய ஆழ்கடல் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

<u>நாகப்பட்டினம் துறைமுகம்:</u> நங்கூரத் துறைமுகமான இத்துறைமுகத்தில், மிதவைகள் மூலம் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

<u>பாம்பன் துறைமுகம்:</u> சிறுகப்பல்கள் / கலங்களுக்குக் கிழக்கு – மேற்கு கடலிணைப்பாக விளங்கக்கூடிய பாம்பன் கால்வாயில், வழிகாட்டும்

பணிகள் செய்யப்படுகின்றன. தற்போதுள்ள பாம்பன் கால்வாயின் ஆழத்தை அதிகரிப்பதற்குச் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

**<u>இராமேசுவரம் துறைமுகம்</u>**: அக்னி தீர்த்தம் பகுதியில் குறுகிய தூரத்திற்கான பயணிகள் படகுப் போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது.

**<u>கன்னியாகுமரி துறைமுகம்</u>**: பயணிகள் படகுப் போக்குவரத்துத் துறைமுகமான இத்துறைமுகத்தில், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், இடையே பயணிகள் படகுப் போக்குவரத்து பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

### 20.4.2 தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள், முனையங்கள்

<u>காட்டுப்பள்ளி துறைமுகம்</u>: கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பாகம் புனையும் பணிகள் லார்சன் அன்ட் டூப்ரோ லிமிடெட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மரைன் இன்ப்ராஸ்ட்ரக்சர் டெவலப்பர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் சரக்கு ஏற்றுமதி / இறக்குமதி செய்யப்படுகிறது.

<u>எண்ணூர் சிறுதுறைமுகம்</u>: பன்முனை நங்கூர மிதவை அமைப்புகள் மூலம் திரவ அமோனியா இறக்குமதி செய்யப்படுகிறது.

<u>கடலூர் துறைமுகத்திற்குள் அமைந்துள்ள கெம்ப்ளாஸ்ட் கடல் முனையம்</u>: தீவுத் தோணித்துறை மூலம் வினைல் குளோரைடு மோனோமர் இறக்குமதி செய்யப்படுகிறது.

**திருக்கடையூர் துறைமுகம்**: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் தேவைக்கேற்ப, 330 மெகாவாட் மின்நிலையத்திற்காக ஒருமுனை நங்கூர மிதவையின் மூலம் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

**கூடங்குளம் துறைமுகம்**: கூடங்குளம் அணுமின் உலைகள் 3, 4, 5 மற்றும் 6க்கான இயந்திரங்கள் / பிரம்மாண்டமான தளவாடங்கள் உருட்டி ஏற்றுதல் – இறக்குதல் தோணித்துறையின் மூலம் கையாளப்படுகிறது.

இதர அறிவிக்கப்பட்ட சிறுதுறைமுகங்கள் சட்டபூர்வ அனுமதிகள் பெறுதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 20.5 சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விபரம்

| வ. எண் | துறைமுகம் | ஏற்றப்பட்ட சரக்குகள் | இறக்கப்பட்ட சரக்குகள் |
|---|---|---|---|
| 1. | கடலூர் | - | வினைல் குளோரைடு மோனோமர். |
| 2. | நாகப்பட்டினம் | - | சமையல் எண்ணெய் |
| 3. | காட்டுப்பள்ளி துறைமுகம் | சரக்குப் பெட்டகங்கள், பொதுச் சரக்குகள் மற்றும் இயந்திரங்கள் | சரக்குப் பெட்டகங்கள் மற்றும் பொது சரக்குகள். |
| 4. | எண்ணூர் சிறு துறைமுகம் | - | திரவ அமோனியா |
| 5. | திருக்கடையூர் | - | இயற்கை வாயு |

## 20.6 துறைமுகங்களை மேம்படுத்துவதில் வாரியத்தின் செயல்பாடுகள்

### 20.6.1 கடலூர் துறைமுக மேம்பாடு

கடலூர் சிறு துறைமுகம் ஒரு இடைநிலை, நங்கூரத் துறைமுகமாகும். இத்துறைமுகம், சிறுகலன்கள் மற்றும் உள்நாட்டுக் கலன்களை கையாளக்கூடிய ஆழ்கடல், கப்பலணையும், அனைத்து பருவகாலத் துறைமுகமாக தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சொந்த நிதி மற்றும் ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறையின் நிதி உதவியுடன் சாகர்மாலா திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் மத்திய மற்றும் மேற்கு மாவட்டத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சரக்குகளை மேம்படுத்தப்பட்ட கடலூர் துறைமுகத்தைப் பயன்படுத்தி கையாளுவதற்கு

ஏதுவாக, திறமையான துறைமுக இயக்குபவரை தேர்ந்தெடுத்து சந்தைப்படுத்தி, பராமரிப்புடன் இயக்குவதற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் ஆணை 24.02.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது.

வரைவு ஒப்பந்தப்புள்ளி கோரும் ஆவணங்கள் மற்றும் வரைவு சலுகை ஒப்பந்தங்கள் தமிழ்நாடு கட்டுமான மேம்பாட்டு வாரியத்தால் ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கப்படும். போட்டி ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் துறைமுக இயக்குபவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

### 20.6.2 கன்னியாகுமரி துறைமுக மேம்பாடு

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கன்னியாகுமரியில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், கரையிலிருந்து நடத்தப்பட்டு வரும் பயணிகள் படகுப்

போக்குவரத்தினை, நடத்தி வருகின்றது. இப்படகுப்போக்குவரத்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**(i) விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத்துறை நீட்டிப்பு செய்தல்**

கன்னியாகுமரி துறைமுகத்தில் விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறையானது, ஒன்றிய அரசின் சாகர்மாலா திட்டத்தின் கீழான 50 சதவீத நிதியுதவியுடன், ரூ.20 கோடி செலவில், அதிக சுற்றுலா / பயணிகளை ஈர்க்க நீட்டிப்பு செய்யப்படவுள்ளது.

**(ii) விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் கடல்சார் பாதசாரிகள் பாலம்**

தமிழ்நாடு கடல்சார் வாரியம், விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் வகையில்

சிறப்புமிக்க நவீன கடல்சார் பாதசாரிகள் பாலத்தை, ரூ.37 கோடி திட்டச் செலவில் அமைக்க, ஒன்றிய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன், சாகர்மாலா திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 20.6.3 உடன்குடி துறைமுகம்

உடன்குடியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 1320 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்காக அணுகு தோணித்துறை (நீளம் 8 கிலோ மீட்டர்) கட்டுவதற்காக இத்துறைமுகம் 2010 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகக் கட்டுமானப் (அணுகு தோணித்துறை) பணிகள் செப்டம்பர்-2018ல் துவக்கப்பட்டு, மார்ச் - 2023க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 20.7 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கீழ் தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தால், 40 பேர் கொண்ட 6 மாத காலப் பொது முறை தங்கிப் பயிலும் மாலுமி பயிற்சி (General Purpose Rating) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 1480 மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர். ஜனவரி - 2022 முதல் 37வது தொகுதி பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், இப்பயிற்சி நிறுவனத்தில் STCW-2010 ன்படி கீழ்க்கண்ட பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது:

I. தன்னிலை பாதுகாப்பு உத்தி

II. தொடக்க முதலுதவி

III. தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு

IV. எண்ணெய் மற்றும் இரசாயனக் கப்பல் சரக்கு கையாளுதல்

V. தீயணைப்பு அடிப்படை பாதுகாப்பு பயிற்சி

VI. கடல் மாலுமிகளுக்கான பாதுகாப்பு பயிற்சி

மேற்கண்ட பயிற்சி வகுப்புகள் ஒன்றிய அரசின் கப்பல் துறை முதன்மை இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவையாகும். இந்த பயிற்சி வகுப்புகள் முடித்த மாணவர்கள் இந்திய மற்றும் வெளிநாட்டுக் கப்பல்களில் வேலைவாய்ப்புகள் பெறுகின்றனர்.

**20.8 2021 – 2022 ஆம் ஆண்டில் வாரியத்தினால் கையாளப்பட்ட சரக்குகள் மற்றும் வாரியத்தின் வருமானம்.**

2021 – 2022 ஆம் ஆண்டில் சிறுதுறைமுகங்கள் வாயிலாக 14,75,141 மெட்ரிக் டன் சரக்குகள் மற்றும் 4,33,138 (TEU – Twenty equivalent Unit) சரக்குப் பெட்டகங்கள் ஆகியவை கையாளப்பட்டு, தமிழ்நாடு கடல்சார் வாரியம், ஏறத்தாழ ரூ.50 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளது.

# 21. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11.04.1974 அன்று நிறுவனங்கள் சட்டம் 1956 இன் படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்திக்குத் தேவைப்படும் உள்நாட்டு நிலக்கரியை எடுத்து வருவதற்காக தமிழக அரசினால் நிறுவப்பட்டது.

## 21.1 முக்கியச் செயல்பாடுகள்

இந்தியாவின் கிழக்குக் கடற்கரை வழியாக நிலக்கரி எடுத்து வருதல் மற்றும் கன்னியாகுமரியில் படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகளுக்கான படகுப் போக்குவரத்து மேற்கொள்வது ஆகியவை இந்நிறுவனத்தின் முக்கியப் பணிகளாகும்.

### 21.2 என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) நிலக்கரி எடுத்து வருதல்

இந்நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல்மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின், வல்லூர், வடசென்னையில் அமைந்துள்ள 3 அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான உள்நாட்டு நிலக்கரி முழுவதையும் பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகத்திற்கு அந்நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நிலக்கரி எடுத்துவரும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

## 21.3 நிலக்கரி எடுத்து வருவதன் செயலாக்கம்

நிலக்கரி எடுத்து வரும் அளவானது, என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) மின்சார உற்பத்திக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிலக்கரியின் அளவைப் பொறுத்தது. 2021-22 ஆம் ஆண்டில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், நிலக்கரியின் தேவை மற்றும் பயன்பாட்டைப் பொறுத்து என்.டி.இ.சி.எல். நிறுவனத்திற்கு நிலக்கரி கொண்டு செல்ல 3 கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

### நிறுவனத்தின் கடந்த நிதி ஆண்டுகளில் செயலாக்கம்

(இலட்சம் மெட்ரிக் டன்).

| வருடம் | துறைமுகங்களில் பெறப்பட்ட நிலக்கரியின் அளவு | எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு |
|---|---|---|
| 2019-20 | 165.00 | 138.97 |
| 2020-21 | 164.00 | 92.90 |
| 2021-22 | 62.86 | 58.73 |

## 21.4 சேவைக் கட்டணம்

என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு நிலக்கரி எடுத்து வரும் பணிக்கான சேவைக் கட்டணமாக, வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களின் வாடகை கட்டணத்தில் 5 விழுக்காடு பெறப்படுகின்றது.

## 21.5 கன்னியாகுமரியில் பயணிகள் படகு போக்குவரத்து சேவை

இக்கழகத்தினால், படகுத்துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகள் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு படகிலும் 150 இருக்கைகள் கொண்ட எம்.எல்.குகன், எம்.எல்.பொதிகை மற்றும் எம்.எல் விவேகானந்தா ஆகிய மூன்று படகுகள் 11.08.1984 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி படகுத்துறையின் செயலாக்கம் மற்றும் நிதிநிலை விவரங்கள்

| வருடம் | பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்த வருவாய் | இலாபம் |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | |
| 2019-20 | 19.74 | 1234.03 | 193.41 |
| 2020-21 | 3.01 | 158.01 | -276.7 |
| 2021-22 | 5.47 | 313.47 | -179.63 |

**21.6 கழகத்தின் நிதி நிலை விவரங்கள்**

கோவிட்-19 முழு ஊரடங்கு காலத்தில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் நிலக்கரி கையாளும் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டது. கோவிட்-19 முழு ஊரடங்கு காலங்களில் படகு போக்குவரத்து சேவை அரசு உத்தரவின் பெயரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் அதன் மூலம் கிடைக்கப் பெறும் வருமானமும் பாதிக்கப்பட்டது.

2021-22 ஆம் ஆண்டில், மொத்த வருவாய் ரூ.299.10 கோடியாகும்.

## 21.7 2022 – 2023 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்

இக்கழகம், தமிழ்நாடு என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) 59.00 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியினை வாடகை கப்பல்கள் மூலம் எடுத்து வருவதற்கு உத்தேசித்துள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது நஷ்டத்தில் இயங்கி வருவதால் அதனை மீட்பதற்கு அனைத்து சாத்தியக்கூறுகளும் ஆராயப்பட்டு வருகிறது.

**எ.வ. வேலு**
**பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்.**

# பிற்சேர்க்கை

## <u>புறவழிச்சாலைகளின் விவரங்கள்</u>

<u>கட்டுமானத்திற்கு முந்தைய நிலை</u>

- மங்கைநல்லூர்
- சன்னாநல்லூர்
- குன்னூர்
- திருத்துறைப்பூண்டி கட்டம்-1
- பார்த்திபனூர்
- பவானி
- கமுதி
- சிவகங்கை
- அருப்புக்கோட்டை மேற்கு புறவழிச்சாலை
- அம்பாசமுத்திரம்

<u>நில எடுப்பு</u>

- பெரியபாளையம்
- வேலூர் வட்டச்சாலை (கட்டம்-1)
- கும்பகோணம் (கட்டம்-3)

- திருக்காட்டுப்பள்ளி
- வலங்கைமான்
- மன்னார்குடி வட்டச்சாலை
- திருவாரூர்
- கரூர் வட்டச்சாலை
- திண்டுக்கல்
- ஆத்தூர் (கட்டம்-1)
- பாப்பாரப்பட்டி
- ஓசூர் வெளிவட்டச்சாலை
- கோவை மேற்கு வட்டச்சாலை
- மேட்டுப்பாளையம்
- சிவகாசி வெளிவட்டச்சாலை
- மயிலாடுதுறை
- ஆற்காடு
- திருப்பத்தூர்
- திருவண்ணாமலை
- நாமக்கல்
- திருச்செங்கோடு
- தென்காசி

- சங்கரன்கோயில்
- முதுகுளத்தூர்
- பல்லடம்
- திருவள்ளூர்
- இராசிபுரம் (கட்டம்-2)
- சூளகிரி
- போடிநாயக்கனூர் (கட்டம்-1)
- திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை
- பொள்ளாச்சிக்கு செட்டிபாளையம் வழியாக மாற்று சாலை
- ஜலகண்டாபுரம்
- உத்திரமேரூர்
- துறையூர் (கட்டம்-2)

<u>விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்</u>

- அறந்தாங்கி
- திருச்சி (அரை வட்ட சாலை)
- ஆலங்குடி
- மயிலாடுதுறை
- முசிறி

- வெள்ளக்கோவில்
- திருப்பூர்
- காங்கேயம்
- பென்னாடம்
- செந்துறை
- செங்கம்
- மேல்கச்சிராப்பட்டு - கீழ்கச்சிராப்பட்டு
- புதுவயல்
- கூடலூர்
- ஆர்.கே.பேட்டை
- பள்ளிக்கொண்டா
- மணச்சநல்லூர் (கட்டம்-2)
- மணப்பாறை
- திருத்துறைப்பூண்டி (கட்டம்-2)
- நன்னிலம்
- அரியலூர் (கட்டம்-2)
- உதகை
- சோளிங்கர்
- கூத்தாநல்லூர்

- திட்டக்குடி
- விருத்தாசலம் (கட்டம்-2)
- கள்ளக்குறிச்சி
- அவலூர்பேட்டை
- துறையூர் (கட்டம்–3)
- அவிநாசிக்கு வடக்கு புறவழிச்சாலை
- காரமடைக்கு கிழக்கு புறவழிச்சாலை
- காரமடைக்கு மேற்கு புறவழிச்சாலை
- தருமபுரி
- கெங்கவல்லி
- போடிநாயக்கனூர் (கட்டம்-2)
- சாத்தான்குளம்
- ஏழாயிரம்பண்ணை
- கோபிச்செட்டிப்பாளையம்
- வத்தலக்குண்டு
- பட்டுக்கோட்டை (கட்டம்-3)
- பெரம்பலூர் (கட்டம்-3)